# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF ... 8 - NOV 1954 MADRAS

439/4-84

—: o :—

"முயற்சி திருவினை யாக்கும்"

தொகுதி 19 } ஜய ஹு ஆடி, ஆவணி மீ 1954 ஜுலை, ஆகஸ்டு { பகுதி 4 & 5

## பொருளடக்கம்

CONNEMARA PUBLIC LIBRARY 18 JAN 1956 MADRAS

பக்கம்

1. பாடக் குறிப்புக்கள் ... 49
2. கணக்கு: கற்பித்தல் ... 53
   T. S. *ராஜகோபாலன்*
3. "வாழ்வில் வளம்" அல்லது யோகாசனங்களும் மனித வாழ்வும் ... 59
   *மாயூரம் கோ. ப. வேலன்*
4. ஆசிரியர் நிலையை உயர்த்த வழிகள் ... 65
5. செய்தித் திரட்டு ... 67
6. பத்திராதிபர் குறிப்பு ... 73

---

## MEMBERS OF THE JOURNAL COMMITTEE

SRI S. NATARAJAN
,, R. KRISHNAMURTHY
,, K. KURUVILA JACOB
,, T. P. SRINIVASAVARADAN
,, P. DORAIKANNU MUDALIAR
,, V. NATARAJAN
,, V. ARUNAJATAI
,, L. MARIAPRAGASAM

SRI S. MARIA JOSEPH
,, J. VAIDYANATHAN
,, J. BALASUBRAMANIAM
,, G. SRINIVASACHARI
,, C. RANGANATHA AIYENGAR, *Secretary*
,, V. B. MURTHI, *Asst. Secretary.*

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0

# தென் இந்திய ஆசிரியர் சங்கம்

## 1954 ஜூலை, ஆகஸ்டு மாதத்திய நாட்குறிப்புக்கள்

---

1-7-54 : தென்கன்னட ஜில்லாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பளம் தாமதமாகக் கிடைப்பதைக் குறித்தும், சங்க மீட்டிங்கில் கலந்துகொள்ளும் நாட்களை வேலை நாட்களாகக் கருதும்படியும் சர்க்காருக்கு விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டது.

3-7-54 : நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்.

6-7-54 : நிர்வாகக் கமிட்டி தீர்மானம் சர்க்காருக்கு அனுப்பப்பட்டது.

12-7-54 : ஜில்லா கில்டுகளுக்கு வருஷாந்தர சங்க ஜாபிதா விவரம் அனுப்ப வேண்டிய பாரம் அனுப்பப்பட்டது.

15-7-54 : பத்திரிகைக் கமிட்டி மீட்டிங்.

" பாலர் கல்வி—மே 1954—பிரசுரம்.

" தென்னிந்திய ஆசிரியன்—மே, ஜூன் 1954—பிரசுரம்.

25-7-54 : அகில இந்திய ஆசிரியர் சாஸனம் எல்லா ஆசிரிய சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டது.

30-7-54 : பாக் தம்பதிகள் சங்க ஆபீசுக்கு விஜயம் செய்தபோது தேநீர் உபசாரம் அளிக்கப்பட்டது.

31-7-54 : மத்திய கல்வி வாரக் கமிட்டி நிறுவப்பட்டது.

" பத்திரிகைக் காரியதரிசி ஸ்ரீ ரெங்கநாத அய்யங்கார் ராமநாதபுரம் ஜில்லாவில் பிரசாரத்திற்காகப் புறப்பட்டார்.

7-8-54 : மாகாணம் முழுவதும் ஆசிரியர் சாஸன தினம் கொண்டாடப்பட்டது.

" சங்கத்தலைவர் காரைக்குடியில் ராமநாதபுரம் ஜில்லா ஆசிரியர் மகாநாட்டை உபக்கிரமித்துப் பேசினார்.

" சங்க காரியதரிசி சென்னை ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சாஸனத்தைப்பற்றி சொற்பொழிவு செய்தார்.

20-8-54 : பாலர் கல்வி—ஜூன் 1954—பிரசுரம்.

22-8-54 : மத்திய கல்வி வாரக் கமிட்டியின் உப கமிட்டி மீட்டிங்.

26-8-54 : மத்திய கல்வி வாரக் கமிட்டி மீட்டிங்.

31-8-54 : தென்னிந்திய ஆசிரியன்—ஜூலை, ஆகஸ்டு 1954—பிரசுரம்

# பாலர் கல்வி


| தொகுதி 19 | ஜய வரு ஆடி, ஆவணி மீ<br>1954 ஜூலை, ஆகஸ்டு | பகுதி 4 & 5 |
|---|---|---|


## பாடக் குறிப்புக்கள்

ஒவ்வொரு ஆசிரியரும் தன் வேலைத் திட்டத்தை முன்னதாகச் சிந்தித்து ஆராய்ந்து குறிப்புக்கள் எழுதுவது அவசியம். பாடக் குறிப்புக்கள் எழுதுவதை சில ஆசிரியர்கள் தமது திறமைக்கும் கௌரவத்திற்கும் ஏதோ பங்கம் செய்வதாக எண்ணுவது தவறு. சிறந்த உத்தம ஆசிரியன் பாடக் குறிப்புக்களை எழுதித் தன் சகாக்களுடன் கலந்து சீர்படுத்தித் தனது தினசரி வேலையில் வெற்றி காண வேண்டும்.

பாடத் திட்டம் தயாரிப்பது ஒருவகை. அன்றன்றைய பாடத்திற்கான விஷயக் குறிப்புக்களும் போதனு முறைகளும் எழுதுவது இன்னொரு வகை. ஓரோர் வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்திற்கான பாடத் திட்டத்தை (சிலபஸ்) மாதாமாதம் வாராவாரம் நடத்த வேண்டிய அளவுப் பகுதிகளை வீதமிட்டு அந்தந்த வாரத்திற்கான அளவைக் குறிப்பிடுவது பாடத்திட்டப் பாகுபாடு ஆகும்.

இதைத் தவிர அந்தந்த வாரப் பகுதியை விவரமாக பாடக் குறிப்புக்களுடன் எழுதுவது முக்கியம். முன்னதாகவே தயாரித்த இக்குறிப்புக்களைப் பாடம் முடிந்த பிறகு, பாடம் நடத்திய விதத்துடன் ஒப்பிட்டு ஆங்காங்கு அனுபவ ரீதியில் எவ்வித மாறுதல்களை அனுசரிக்கவேண்டியிருந்தது என்று குறிப்பிட வேண்டும். பாடக் குறிப்புக்களில் ஆங்காங்கு காலியிடம் விட்டிருந்தால் இம்மாறுதல்களைக் குறிப்பிட வசதியாயிருக்கும். இந்த நோட்டுப் புத்தகம் ஆசிரியரது சொந்த உடமை. இதையே பல வருஷங்கள் உபயோகிக்கலாம். ஆனால் அவ்வப்போது அனுபவத்தில் கண்ட மாறுதல்களைக் குறிப்பிட வேண்டும். விஷயக் குறிப்பு, நோக்கம், அறிமுக வினுக்கள், உபகரணங்கள், படங்கள், துணைப் புத்தகக் குறிப்புக்கள், விஷயச் சுருக்கம், சோதனை வினுக்கள், செயல் வேலைகள், விளையாட்டுகள் முதலிய அம்சங்கள் இருக்க வேண்டும்.

பாடத் திட்டம், பாடக் குறிப்பு இவ்விரண்டையும் தவிர ஒவ்வொரு வகுப்பிலும் பாடம் நடந்த பிறகு நடத்திய பாட விவரம் எழுதும் இன்னொரு நோட்டுப் புத்தகமும் உண்டு. இதில் அந்தந்த வாரம் வகுப்பில் நிறைவேறிய பாட அளவு எழுதியிருப்பதால், பாடத் திட்டப்படி வகுப்பில் பாடங்கள் நடைபெறுகின்றனவா என்று தலைமை ஆசிரியர் கவனிக்க இது உதவும். இந்த நோட்டுப் புத்தகம் பள்ளியின் சொத்து ஆகும்.

பாடத் திட்டம் (சிலபஸ் பாகுபாடு), பாடக் குறிப்பு (ஆசிரியர் முன்னதாகத் திட்டமிடும் விஷயம் முறைக் குறிப்புக்கள்), பாடம் நடைபெற்ற அளவு—ஆக இம் மூன்றும் ஆசிரியர் தொழிலுக்கு அவசியமானவை.

பாடக் குறிப்புக்களில் ஆசிரியர் எவ்விதம் எழுதுவது என்பதை விளக்க ஒரு மாதிரிக் குறிப்பு கீழே கொடுத்திருக்கிறோம்.

**இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்—**

**தாவரங்களின் வாழ்க்கை—**

**விதைகளைப் பரவச் செய்யும் விதங்கள்,**

வகுப்பு IV. நேரம் 40 நிமிஷம்.

குறிப்பான நோக்கம் :—செடிகள் தம் விதைகளைப் பல இடங்களிலும் பரவும்படி செய்யும் தந்திரங்கள்.

## விஷயம்

1. புதிய செடிகள் உண்டாக விதைகள் வேண்டும்.

ஒவ்வொரு செடியும் தான் வளர்ந்த பிறகு தன்னைப்போல் இன்னொரு குழந்தைச் செடி உண்டாக்க ஆசைப்படுகிறது.

2. நாம் விதைகளை நடாமலே சில செடிகள் முளைக்கின்றன. இப்படி முளைக்கும் செடிகளுக்கு விதைகள் எப்படிக் கிடைக்கின்றன ?

3. செடிகள் நெருக்கமாக வளர்ந்தால் ஒவ்வொரு செடியும் புஷ்டியாக இருப்பதில்லை. ஒவ்வொரு விதையும் ஒரு செடிக் குட்டி (குஞ்சு) முட்டை. ஒவ்வொரு செடிக் குட்டியும் எட்ட இருந்து தாராளமாய் வளர வேண்டும். இதுவே தாய்ச் செடியின் ஆசை.

4. செடிகள் கூட்டமாக வளர்வதால் என்ன தீமை ?

பூமியிலிருந்து கிடைக்கும் உணவு பல செடிகளுக்கும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு செடிக்கும் புஷ்டியான உணவு போதுமான அளவு கிடைக்காது.

வேர்கள் சிக்கிக் கொள்ளும்.

செடி இலைகள் நெருக்கமாக இருக்கும்.

சூரிய வெளிச்சம் காற்று எல்லாச் செடிகளுக்கும் வேண்டிய அளவு கிடைப்பது கஷ்டம்.

போட்டியிட்டுக் கொண்டு சில செடிகள் உயர்ந்து செல்லும். ஆனல் பல செடிகள் இடுக்குகளில் வளர முடியாமல் நோஞ்சையாகி மடிந்துபோம்.

5. தாய்ச் செடி தன் காலடியிலேயே குழந்தைச் செடிகள் வளர வேண்டுமென்று ஆசைப்படுவதில்லை. அப்படி வளர்ந்தால் ஒவ்வொரு குழந்தைச் செடியும் புஷ்டியாக வளராது. தூரந் தூரம் அனுப்பவே தாய்ச் செடி ஆசைப் படுகிறது.

6. செடிகள் தம் விதைகளை எவ்விதம் தூர இடங்களுக்கு அனுப்பும் ?

பல செடிகள் தம் விதைகள் பல இடங்களுக்குப் போகும்படி செய்திருக்கும் முறைகளைக் கவனிப்போம்.

### 1. பழங்கள்

பழத்தினுள் இருக்கும் விதை பல தூர இடங்களில் போய்ச் சேரும்.

மனிதர்களுக்கும், இதர ஜீவப் பிராணி பட்சிகளுக்கும் பழம் கொடுத்து உதவி செய்யும் செடிகள், தங்கள் ஆசையையும் நிறைவேற்றிக் கொள்கின்றன. பழம் தின்னும் மனிதர்களும் பிராணிகளும் பட்சிகளும் தாங்கள் உதவி செய்கிறோம் என்று அறியாமலேயே செடிகளுக்கு உதவி செய்கிறார்கள்.

### 2. முட்கள்

சில செடி விதைகளைச் சுற்றியுள்ள கொட்டை சொறசொறப்பாக இருக்கும். முட்கள் பெற்று இருக்கும். நெருங்கி உராய்வோர்மேல் பற்றிக்கொண்டு தூரப் போய்ச் சேரும்.

### 3. வெடிக்கும் காய்கள்

ஆமணக்கு, வெண்டி, முருங்கை முதலியன.

### 4. காற்றினல் சில விதைகள் பரவும்

வெடித்தவுடன் விதை பறந்து செல்ல உதவியாக விதையைச் சுற்றிலும் சிறகுகள் போன்ற மெல்லிய பஞ்சு அல்லது நார் இருக்கும்.

லேசான பொடி விதைகள் காற்றில் சுலபமாகப் பறந்து தூரத்திற்குச் செல்லும்.

### 5. ஓடும் ஜலத்தில் சில விதைகள் தூரம் கொண்டு போகப்படும்.

## முறை

**வினுக்கள்—**

நெல் பயிர்கள் உண்டாக்க நாம் என்ன செய்கிறோம் ?

கீரைச் செடிகள் முளைக்க நாம் என்ன செய்கிறோம் ?

ஒவ்வொரு புதிய செடிக்கும் அந்தச் செடியின் விதையை நடவேண்டும்.

சம்பாஷணை—வினு விடை மூலம் விளக்குதல்.

அந்திமந்தாரை, காக்கரட்டான் முதலிய விதைகள் தாமாகவே விழுந்து செடிகள் முளைக்கின்றன. மதில்கள், ஓட்டு வீடுகள் கிடுக்குகளில் வேம்பு, ஆல் முதலிய செடிகள் முளைக்கின்றன. விதைகள் எப்படி வந்தன ?

பட்சிகள் விழுங்கும் பழங்களிலிருந்து விதைகள் விழுந்து முளைக்கும்.

கீரைப் பாத்தியில் செடிகள் நெருக்கமாக இருந்தால் என்ன செய்கிறோம் ?

நெற் பயிர்களை நாற்றுப் பிடுங்கி விசாலமாக நடுகிறோம்.

புதிய முறை (ஜப்பானிய முறை என்று சொல்கிறோம்)ப் படி ஒவ்வொரு நெல் செடியும் தனியாக வளர்ந்தால் புஷ்டியாகி தானியம் நிரம்ப இருக்கும்.

ஜனக் கூட்டத்தில் நமக்கு எவ்வளவு கஷ்டம் ?

உடம்பு வியர்வை அதிகமாகி மூச்சு விடத் திணறுகிறோம்.

வீடுகள் நெருக்கமாக இருப்பதால் ஜனங்கள் வாழ்க்கை சுகம் குறைகிறது அல்லவா ?

ஆடு, மாடு, கோழி—வளர்க்கும்போது அவைகள் தாராளமாக வசிக்க இடம் வேண்டுமல்லவா ?

விளக்கிச் சொல்லுதல்.

ஒவ்வொரு செடியும் தாராளமாக வளர்ந்தால்தான் செடி செழுமையாக இருக்கும்.

தன் குழந்தை நன்றாக வளர வேண்டும் என்பதே ஒவ்வொரு தாயின் ஆசை.

தாய்ப் பூனை தன் குட்டிகளை ஒவ்வொன்றாக வெவ்வேறு வீடுகளில் கொண்டுபோய் விடும்.

ஒரு குடும்பத்தில் ஒவ்வொரு மகனும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று ஜீவனம் செய்து வாழ ஆசைப்படுகிறான்.

சில விதைகளை நாம் எடுத்து வேண்டிய இடங்களில் நட்டுப் பயிரிடுகிறோம்.

பழங்கள் இனிப்பான உணவு. அவைகளை நாம் தின்றுவிட்டுக் கொட்டைகளை எறிகிறோம். மிருகங்கள், பட்சிகள் பழங்களைத் தின்று கொட்டைகளைப் போடுகின்றன. வேம்பு, ஆல் இவைகள் முளைப்பது இவ்விதம்தான்.

தமது பழங்களைக் காட்டி நமது ஆசையைத் தூண்டி விடுவதால் செடிகள் தம் விதைகள் நெடுந்தூரம் போகும்படி செய்து கொள்கின்றன.

இப்படியே இயற்கை நியதியில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது விளங்கும்.

இனிப்பான பழங்கள் இல்லாத செடிகளுக்கு இவ்வித தந்திரங்கள் உண்டு.

ஊக முள், நெரிஞ்சி முள்—விளக்கி சம்பாஷிக்க—

ஒட்டிக்கொண்டு கொஞ்ச தூரம் நம்முடன் வரும். பிறகு எடுத்து எறிவோம். இம்முட்கள் பற்றிக் கொள்வதை நாம் கோபிப்போம்.

ஆனால் அவைகள்—“ஐயா, என்னை வேறு இடத்தில் கொண்டு போய் விடுங்கள்” என்று கெஞ்சுவது போலப் பற்றிக் கொள்ளும்.

காய்ந்த காய்களை மாதிரி காட்டி விளக்குதல்.

வெடித்து தூரத்தில் விழுந்து முளைக்கும்.

எருக்கன் காய் முற்றியவுடன் விதைகள் பறந்து செல்வதை விளக்குதல்.

மாதிரி ஒரு விதை காட்டுதல்.

பிள்ளைகள் இவ்விதைகள் பறந்து செல்வதை விளையாட்டாக அனுபவிக்கிறார்கள். "ராவணன் மீசை" என்று ஒரு விதை—காற்றில் ஓடும்.

பருத்தி விதைகளைச் சுற்றி உள்ள பஞ்சு—விதை பறக்க உதவும்.

துளசி, வீபூதிப் பச்சை விதைகள் பொடி போல் தூளாக இருப்பதால் பறந்து செல்லும்.

இவைகளை எல்லாம் மாதிரி காட்டி விளக்குதல்.

தென்னை நெற்றுகள் ஜலத்தில் மிதந்து இவ்விதம் செல்லும். கடற்கரையோரங்களிலும் ஆற்று ஓரங்களிலும் தென்னை மரங்கள் இவ்விதம் தானே முளைத்து வளர்கின்றன.

### பாடச் சுருக்கம்

1. செடிகள் நெருக்கமாக இல்லாமல் தாராளமாக வளர்ந்தால் புஷ்டியாகி நல்ல பலன் தரும்.

2. விதைகள் தூரந் தூரமாக விழுந்து முளைக்க வேண்டும்.

3. ஜீவப் பிராணிகள் (மனிதர்கள், மிருகங்கள், பட்சிகள்) பழங்களைத் தின்று விதைகளைத் தூரப் போடுகிறார்கள்.

4. முட்கள் இருப்பதால் சில விதைகள் தூரமாக எடுத்துப் போகப்படும்.

5. வெடிக்கும் பழங்களிலிருந்து விதைகள் தூரப் போய் விழும்.

6. காற்றில் விதைகள் பறந்து தூரப் போய் விழும்.

7. ஜலத்தில் மிதந்து விதைகள் தூரச் செல்லும்.

### சோதனை வினுக்கள் :

1. விதைகள் தூரந் தூரமாகப் போவதால் என்ன நன்மை?

2. பழங்களால் என்ன பிரயோசனம்?

3. மா மரத்திலிருந்து ஒரு பையன் ஒரு பழத்தைப் பறிக்கிறான். மா மரத்திற்கும் பையனுக்கும் சம்பாஷணை நடந்ததாக கற்பனை செய்து எழுது.
(பேசி நடித்தும் காட்டலாம்)

4. விதைகள் மேல் முட்கள் ஏன் இருக்கின்றன?

5. வெடிக்கும் காய்கள் இரண்டு கூறு.

### செயல் அலுவல்கள்

1. மியூசியத்திற்குச் சேகரம் செய் :—
பீர்க்கன் நெற்று, எருக்கன் விதை, முருங்கை விதை, வெண்டி, ஊக முள், நெருஞ்சி முள்.

2. படம் எழுது :—
முருங்கை விதை. (சிறகுகள்காட்டு)
பருத்தி விதை. (பஞ்சுடன்)

---


## "புதுமை கண்ட பெரியோர்கள்"

(சிறுவர் நூல்நிலையங்களுக்கானது)

**5-வது, 6-வது வகுப்பு மாணவர்கள் இலகுவாகப் படிக்கக்கூடிய புத்தகம்.**

சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்திலிருந்து குழந்தைகளுக்காக ஒலி பரப்பப்பட்ட புதுமை கண்டு பிடித்த ஆறு விஞ்ஞானிகளின் சரிதைகள் படங்களுடன் அகில இந்திய ரேடியோ ஸ்தாபனத்தின் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**விலை அணா 12**

புத்தகம் வேண்டுவோர் முன் பணத்துடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**எஸ். ஐ. டி. யு. பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்,**
**520, ஹைரோடு, திருவல்லிக்கேணி, சென்னை—5**

## கணக்கு : கற்பித்தல்

### 4. முதல் வகுப்பு : எண்கள் - கூட்டல்

[T. S. ராஜகோபாலன், B. A., L. T.,
இந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி]

**கூட்டல் என்பது என்ன ?**

வகுப்பறையில் ஒரு பெஞ்சில் 4 குழந்தைகளும், வேறொன்றில் 3 குழந்தைகளும் இருந்தால், இந்த இரண்டு பெஞ்சுகளிலும் சேர்ந்து 7 குழந்தைகள் உள்ளனர் என்பது நமக்கு மனதில் நன்கு பதிந்துவிடுகிறது. கூட்டல் என்பது என்ன என்று தெரியாத ஒருவன், இரண்டாவது பெஞ்சிலுள்ள குழந்தைகளை, 4-க்குப் பிறகு 5, 6, 7 என்று எண்ணி மொத்தம் 7 குழந்தைகள் என்பான். 4-ம் 3-ம் 7 என்று தெரிந்தால், இவ்வாறு எண்ணி மொத்தம் கணக்கிடுவதில் வீணாகக் காலத்தைக் கழிக்க வேண்டியதில்லை. ஆக, கூட்டல் என்பது எளிதில் எண்ணிக்கை செய்யப் பயன்படும். இரண்டு ராசிகளைக் கூட்டும்போது, ஒவ்வொன்றின் எண்ணிக்கையையும் முதலில் ஏற்றுக்கொண்டு, பின்புதான் மொத்தம் என்ன என்று அறிகிறோம்.

**ஆதாரக் கூட்டல்கள் நூறு.**

இரண்டு எண்களைக் கூட்டுவதற்கு ஆதாரமாக உள்ளன, 0 முதல் 9 வரையில் இலக்கங்களை ஒன்றோடொன்று கூட்டுவதாகும். 0 முதல் 9 வரையில் இலக்கங்களை வரிசையாக எழுதி, இவை ஒவ்வொன்றுடனும் 0, 1, 2, ..., 9— இவற்றை ஒவ்வொன்றாகக் கூட்டினால், பின்வருமாறு 100 கூட்டல்கள் கிடைக்கும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I. | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| II. | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| III. | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| IV. | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| V. | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| VI. | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| VII. | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| VIII. | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| IX. | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| X. | 4 | 4 | 4 | 4 | 4 |
| | 5 | 6 | 7 | 8 | 9 |

**XI.**

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 6 | 7 | 8 | 9 |
| 5 | 5 | 5 | 5 | 5 |

**XII.**

| | | | |
|---|---|---|---|
| 5 | 5 | 5 | 5 |
| 6 | 7 | 8 | 9 |

**XIII.**

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| 6 | 6 | 6 | 6 |

**XIV.**

| | | |
|---|---|---|
| 6 | 6 | 6 |
| 7 | 8 | 9 |

**XV.**

| | | |
|---|---|---|
| 7 | 8 | 9 |
| 7 | 7 | 7 |

**XVI.**

| | |
|---|---|
| 7 | 7 |
| 8 | 9 |

**XVII.**

| | |
|---|---|
| 8 | 9 |
| 8 | 8 |

**XVIII.**

| |
|---|
| 8 |
| 9 |

**XIX.**

| |
|---|
| 9 |
| 9 |

குறிப்பு: 0+0 என்பது வரி I-லேயே வருவதால், இதை வரி II-ல் எழுதவில்லை; 0+1 என்பது வரி II-ல் வருவதால், இதை வரி III-ல் எழுதவில்லை. இவ்வாறு ஒவ்வொரு வரியிலும், ஏற்கனவே வந்துள்ள கூட்டல்கள் நீக்கப்பெற்றுள்ளதைக் கண்டுகொள்ளலாம். இந்த 100 கூட்டல்களுள் 45 நேரியல் கூட்டல்கள், 36 திருப்பங்கள். உதாரணமாக, 3+4 என்பது திருப்பி 4+3 என்று ஆகக்கூடும்; 3+4 என்பது நேரியல் கூட்டல், 4+3 என்பது திருப்பம். 1+1, 2+2, 3+3, ... என்பன திருப்பங்களாகா. பூஜ்யங்கள் வருங் கூட்டல்கள் 19.

## கற்பிக்கும் முறை.

குழந்தைகள் பின்பு கற்கவேண்டியவைகளுக்கு இக்கூட்டல் ஆதாரமாவதால், இக்கூட்டல்களைப் பார்த்தவுடனேயே விடை மனதில் எழுமாறு ஆற்றல் பெறுவது சால அவசியமாகும். இக்கூட்டல்களை மேலே கொடுத்துள்ளவாறே மனப்பாடஞ் செய்யச் சொல்லுவதெனில், குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே கணக்கு எனில் மனக் கசப்பு ஏற்படும். ஆதலால் இக்கூட்டல்களை ஒருங்கே எடுத்துக்கொள்ளாமல், இவற்றைச் சிறு பகுதிகளாக்கிக் கொண்டு, ஒவ்வோர் பகுதியிலும் கூட்டல்கள் மனப்பாடம் ஆகும்வரை போதிய அளவு பயிற்சி அளிக்க வேண்டும் என்கின்றனர் போதனு முறையில் வல்லுநர்.

மேலே காட்டியுள்ள 19 வரிசைகளில், I, II என்ற வரிகளில் 0 வந்துள்ளதால், இக்கூட்டல்களை முதலில் கற்பிப்பது சரியல்ல. III, IV — இவற்றிலுள்ள கூட்டல்கள் மிக எளியவை; XVII, XVIII, XIX — இவற்றிலுள்ளவை மிகவும் கடினமானவை; ஆதலால் III, XVIII — இவற்றை முதலில் எடுத்துக்கொண்டு, பின்பு IV, XVII—இவற்றை எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு இந்த 100 கூட்டல்களையும் 10, 10 கூட்டல்கள் கொண்ட 10 பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளலாம். பின்வருமாறு பிரித்துக்கொள்வது நலம் என்பது என்னுடைய துணிவு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதற் பிரிவு | III, | XVIII | 6-ம் பிரிவு | VIII, | XIII |
| 2-ம் பிரிவு | IV, | XVII | 7-ம் பிரிவு | IX, | XII |
| 3-ம் பிரிவு | V, | XVI | 8-ம் பிரிவு | I, | |
| 4-ம் பிரிவு | VI, | XV | 9-ம் பிரிவு | II, | XIX |
| 5-ம் பிரிவு | VII, | XIV | 10-ம் பிரிவு | X, | XI |

இப்பிரிவுகள் ஒவ்வொன்றின் போதனையும், மூன்று படியாகும். முதலாவது சிறுர்கள் கூட்டல்களை மனதில் ஏற்று மனப்பாடம் செய்வதாகும்; இரண்டாவது, மனதில் ஏற்றவற்றை உபயோகித்து கணக்குகளைச் செய்வதாகும்; மூன்றுவது, கூட்டல்கள் மனதில் நன்கு படிந்துள்ளனவா என்று பரீட்சை செய்வதாகும்.

ஒவ்வொரு பிரிவினுமுள்ள கூட்டல்களைக் கற்பிக்கும் போது, வெறுங் கூட்டல்களைக் கற்பிக்காமல், ஒவ்வொன்றையும் சூழ்நிலைக்கேற்ற கணக்கில் பொருத்தி, இவை தினசரி வாழ்க்கையில் எவ்வாறு பயன்படும் என்பதை உணர்த்த வேண்டும். சூழ்நிலைக்கேற்ற கணக்குகளை ஆங்கிலத்தில் Stories (கதைகள்) என்கின்றனர், மேனுட்டினர். ஒவ்வொரு பிரிவையுங் கற்பிக்குமுன்னர், சூழ்நிலையில் எந்த எந்த அமிசம் உபயோகிக்கலாம் என்று குறித்துக் கொள்ளுதல் நல்லது. இந்தக் "கதைகள்" அவ்வக் காலத்திற்கேற்பவும், வகுப்பிற்கேற்பவும் மாறுபடும். முதல் நாள் ஒரு பிரிவு கற்பித்த பிறகு, மறுநாள் இப்பிரிவிலுள்ள கூட்டல்கள் மனப்பாடமாகிவிட்டனவா என்று சோதனை செய்ய வேண்டும். சோதனை வெறுங் கூட்டல்களாவது, "கதைகளாவது" இருக்கலாம். பிரிவுகள் 2, 3 நடந்த பின்பு அவற்றுள் வரும் கூட்டல்களைச் சேர்த்துச் சோதனை செய்ய வேண்டும்.

இரண்டு பிரிவுகளின் போதனை, கீழே எடுத்துக்காட்டாகக் கொடுக்கப் பெற்றுள்ளன.

## பிரிவுகள் III, XVIII (முதற் பிரிவு)

### ஆசிரியரின் குறிப்புக்கள் ; சூழ்நிலையில் உபயோகப்படும் வகைகள் :

(1) இன்று 7-ம் தேதி எனில், நாளை தேதி 8,

(2) இது 3-வது மாதம்; அடுத்தது 4-வது மாதம்,

(3) இந்தப் பக்கம் 6-வது ; அடுத்தது 7-வது,

(4) அடுத்த வீட்டின் இலக்கம்,...... முதலியன.

### $1+1=2,\quad 2+1=3,\quad 3+1=4,$ ...... — இவற்றின் போதனை

இந்தப் பெஞ்சில் 1 பையன் இருக்கிறுன் ; இதோ ஒரு பையன் வருகிறுன் ; 1 பையனும் 1 பையனும் சேர்ந்து 2 பையன்கள்.

இதோ ஒரு சோழி ; இத்துடன் ஒரு சோழி சேர்க்கிறேன் ; 1 சோழியும் 1 சோழியும் சேர்ந்து 2 சோழி. இவ்வாறே 1 படமும் 1 படமும் சேர்ந்து 2 படம்.

1 விரையும் 1 விரையும் சேர்ந்து 2 விரை ;

1-ம் 1-ம் சேர்ந்து 2;

அதாவது 1-ம் 1-ம் 2.

பிள்ளைகள் சேர்ந்து சொல்லவேண்டுவது : **ஒன்றும் ஒன்றும் இரண்டு.**

இவ்வாறே மற்றக் கூட்டல்களும் கற்பிக்கலாம்.

### பதிவுக் கணக்குகள்

**A. வயது**

1. விமலாவுக்கு வயது 5. ஒரு வ்ருஷம் கழித்து வயது......

2. முத்துவுக்கு வயது 6. ஒரு வருஷம் கழித்து வயது...... அடுத்த வருஷம் வயது......

**B. தேதி முதலியன**

1. இன்று தேதி 3; நாளைக்குத் தேதி...
2. இன்று தேதி 5; நாளைக்குத் தேதி...
3. இது 6-வது மாதம்; அடுத்த மாதம்...
4. இந்தப் பக்கம் 7-வது; அடுத்த பக்கம்...

### சோதனை (A) மனக் கணக்குகள் :

(மாதிரிகள்) 1. பாப்பாவிடம் 3 ரூபாய் இருந்தது; அம்மா அவளுக்கு 1 ரூபாய் கொடுத்தாள். பின்பு அவளிடம்......ரூபாய் இருந்தது.

2. 4 அணுவுக்கு மிட்டாய் வாங்கினேன், 1 அணுவுக்கு பலப்பம் வாங்கினேன். மொத்தச் செலவு ... அணு.

3. 7-ம் 1-ம் ......
4. 6-ம் 1-ம் ......
5. 5 - உடன் 1 கூட்டினுல், மொத்தம்...

**(B) கரும்பலகையில்**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 4 | 6 | 5 | 3 |
| 1 | 1 | 1 | 1 | 1 |
| — | — | — | — | — |
| — | — | — | — | — |

**(C) அட்டைகள் (Flash cards)**

சில கூட்டல்களை அட்டைத் துண்டுகளில் எழுதி, விடைகளை மாத்திரம் காலி இடங்களில் எழுதச் செய்யலாம். அல்லது விடைகள் எழுதப் பெற்றுள்ள அட்டைத் துண்டுகளைத் தக்கவாறு அமைக்கச் செய்யலாம்.

### பிரிவுகள் VIII, XIII (6-ம் பிரிவு)

ஆசிரியரின் குறிப்புக்கள் : (i) $3+4$, $3+5$, $3+6$,... என்பன முறையே $4+3$, $5+3$, $6+3$,... இவற்றின் திருப்பங்கள்; $6+6$, $7+6$, $8+6$, $9+6$,... இவை புதியன. (ii) சூழ்நிலை : சாமான்கள் வாங்குதல், வயது, விளையாட்டுக்கள் முதலியன.

3 சோழியும் 4 சோழியும் சேர்ந்து 7 சோழி.

♦♦♦ + ♦♦♦♦ = ♦♦♦♦♦♦♦
♦♦♦♦ + ♦♦♦ = ♦♦♦♦♦♦♦

4 சோழியும் 3 சோழியும் சேர்ந்து 7 சோழி.

4 விரையும் 3 விரையும் சேர்ந்து 7 விரை.

4-ம் 3-ம் சேர்ந்து 7.

பிள்ளைகள் சேர்ந்து சொல்ல வேண்டியது;

3-ம் 4-ம் 7; 4-ம் 3-ம் 7.

இவ்வாறே மற்றக் கூட்டல்களும்.

6+7, 7+6, 8+6, 9+6 இவற்றை முன்போல் கற்பிக்கலாம்.

**பதிவுக் கணக்குகள் (வகைகள்) :**

1. **செலவு :** பாட்டி எனக்கு 3 அணுவுக்கு பொம்மை வாங்கினாள்; 4 அணுவுக்கு ஊதல் வாங்கினாள். மொத்தச் செலவு......
2. **வயது :** இப்போது பட்டுவுக்கு வயது 3. இன்னும் 5 வருஷம் கழித்து வயது......
3. **வயது :** முரளிக்கு 3 வயது; பார்வதிக்கு 6 வயது அதிகம், பார்வதிக்கு வயது......
4. நாங்கள் 3 பேர் சாப்பிட உட்கார்ந்தோம். 4 பேர் கூடச் சாப்பிட்டார்கள். மொத்தம் சாப்பிட்டவர்கள்......
5. எனக்கு 3 பாட்டுத் தெரியும். அம்மா 5 பாட்டுச் சொல்லிக் கொடுத்தாள். மொத்தம்...பாட்டுத் தெரியும்.
6. 3+7, 3+6,......
7. 3-ம் எதுவும் சேர்ந்து 8?
8. 3-ம் எதுவும் சேர்ந்து 10?

**சோதனை**

**(A) மனக் கணக்குகள் (வகைகள்) :**

1. திருவிழாவிற்குப் போனோம். எனக்கு ரயில் சத்தம் 3 அணு ஆயிற்று, வண்டிச்சத்தம் 7 அணு ஆயிற்று. மொத்தம்......
2. விமலா 6 அணுவுக்கு பொம்மையையும், 6 அணுவுக்கு ரிப்பனும் வாங்கினாள். மொத்தம்......செலவாயிற்று.
3. கோமளம் 8 அணுவுக்கு பூவும் 6 அணுவுக்குப் பழமும் வாங்கினாள். மொத்தச் செலவு......
4. 3-ம் 5-ம் ......
5. 7-ம் 6-ம் ......
6. 3-ம் எதுவும் சேர்ந்து 7?
7. 6-ம் எதுவும் சேர்ந்து 12?
8. 7-ஓடு எதைக் கூட்டினால் 13 ஆகும்?

(B) கரும்பலகையில்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 3 | 3 | 6 | 7 | 9 | 8 | 3 |
| 8 | 6 | 9 | 6 | 6 | 6 | 6 | 4 |
| — | — | — | — | — | — | — | — |

காலி இடங்களில் இருக்கவேண்டிய எண்கள் எவை?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 9 | 3 | .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. | 5 | 6 | 6 | 4 |
| — | — | — | — | — | — | — | — |
| 7 | 12 | 15 | 8 | 8 | 12 | 15 | 7 |

(C) அட்டைகள் (Flash cards) முன்போல்.

*இந்த ஆதாரக் கூட்டல்களின் விடைகளைச் சிறுவர் சிறுமியர் தடங்கலின்றிச் சொல்லப் பழக்குவது மிகவும் முக்கியமானது. அவர்கள் விரல்களை உபயோகித்துக் கூட்டச்செய்யக் கூடாது. அவ்வப்போது சோதனை செய்யும்போதும் அவர்கள் செய்யும் பிழைகளைத் திருத்திச் சொல்லும்போதும் போதிக்கும்போது உபயோகமாகும் உபகரணங்களைக் கொண்டே சரியான விடைகளைக் கண்டுபிடிக்கச் செய்யலாம். இந்த ஆதாரக் கூட்டல்கள் சரியாக மனதில் ஏற்றுக்கொள்ள 20, அல்லது 25 நாட்கள் ஆகும்.*

---


## தமிழ் உபபாட புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

**இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.**

## தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

| | அணா | | அணா |
|---|---|---|---|
| 1. மகாத்மா காந்தி | 10 | 4. கவியரசி சரோஜினி | 8 |
| 2. கவியரசர் தாகூர் | 8 | 5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்) | 12 |
| 3. தேசிய கவி பாரதியார் | 8 | | |

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை


6. வீர சிவாஜி அணா 10 7. சுவாமி விவேகானந்தர் அணா 12

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

## "வாழ்வில் வளம்"
## அல்லது யோகாசனங்களும் மனித வாழ்வும்

அகில இந்திய யோகாச்சாரியா-மாயூரம்-கோ. ப. வேலன், ஓவியப்புலவர்,
உடற் பயிற்சி வல்லுனர், காந்தி கலா நிலையம், எரிசினம்பட்டி, கோவை ஜில்லா.

படப்பிடிப்பு :—கண்ணன் ஸ்டுடியோ, கோவை.



### 11. கிகிணி ஆசனம் அல்லது வலியன் தோகையாசனம்


முன் இரு ஆசனங்களைப் போல் மல்லார்ந்து படுக்கவும், கைகளும் முன் இரு ஆசனங்களைப்போல் இருக்க வேண்டும். மூச்சை உள் இழுத்த வாறே, முதலில் வலது காலை மட்டும் தரையிலிருந்து உயர்த்தி பாழி வேதிகை ஆசன நிலையில் கொணர்ந்து நிறுத்துக. முடிந்த வரை மூச்சை நிறுத்தி மூச்சை வெளி விடுக. ஒரு நிமிடம் முதல் இரண்டு நிமிடங்கள் வரை இந்நிலையில் இருக்கலாம். முடிவில் மூச்சை வெளிவிட்டவாறே உயர்த்தியுள்ள வலது காலை நிதானமாக தாழ்த்தித் தரையில் கிடத்துக. பிறகு இடது காலை மட்டும் மூச்சை உள் இழுத்தவாறே பாழி வேதிகை ஆசன நிலைக்கு உயர்த்தி நிறுத்துக. வலது காலை எவ்வளவு காலம் உயர்த்தி வைத்திருந்தோமோ அதே காலம்வரை இவ் இடது காலையும் நிறுத்தி முன்னர் போல் மூச்சுப் பயிற்சி செய்க. முடிவில் இடது காலைத் தரையில் தாழ்த்துக. வேகம், வேகமாக கால்களை உயர்த்தலும் தாழ்த்தலும் கூடாது. இவ் ஆசனத்தை கால்கள் மாற்றி மாற்றி நோயுற்றோர் நீண்ட நேரம் பழகலாம். நோய் அற்றோர் ஒவ்வொரு காலுக்கும் ஒவ்வொரு நிமிடம் பயில்க.

இதே மாதிரியாக ஒவ்வொரு காலாக உயர்த்தி செங்கோண ஆசன நிலையிலும் இருக்கலாம்.

வலியன் குருவி தன் வாலினால் தன் விரோதியான பறவைகளை அடித்துத் துரத்துகிறது. அதன் தோகைக்கு நல்ல வலுவு இருக்கின்றது. இவ்வாசனம் பயில்வதன் மூலம் கால்களுக்கு நல்ல வலு ஏற்படும். இவ் ஆசனத்தை கத்தரிக்கோல் ஆசனம் என்றும் கூறுவர்.

**நன்மை :—**

யானைக்கால் வியாதியை துவக்கத்திலேயே இவ் ஆசனங்கள் பழகி (9,10,11) அகற்றலாம். இந்நோய் முற்றியதாய் இருப்பின் நீண்ட நாள்—தொல்லை அடைந்தவராயின்—நோய், மேலும் மேலும் அதிகரிக்காதவாறு தடுக்கும். நோயினால் படும் துயரமும் குறையும். தினவு, சீழ்வடிதல், செந்நீர் வெளிப்படல், கெட்ட நீர் வருதல் குறைந்து நாடோறும் நன்கு ஆசனம் பழக நோய் நீங்கும்.



### 12. பாய்மர ஆசனம்

**ஐயுணர் வெய்தியக்கண் ணும் பயனின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.** (குறள்-354)

**வையத்து மக்கள் நோயற்று வாழ
பாய்மரா சனம்பயிலல் பண்பு.**

"வேலன்".

குழந்தைகள் மல்லாந்து படுத்து—குப்புறப்படுத்து—கால் பெருவிரல் சூப்பி—குப்புறப்படுத்து நீந்தும் நிலைப்பயின்று—உட்கார்ந்து — நின்று — தவழ்ந்து — நடந்து—முன்னால் வளைந்து, பின்னால் வளைந்து—எண்ணரிய ஆசனப் பயிற்சிகள் இயற்கையாகவே பயின்று — பழகி — உடல், குடல், உறுப்புக்கள் அனைத்தும் வலுப்பெற்று வளர்ச்சி யடைகின்றன. குழந்தைகள் செய்யும் செய்கைகளை, ஆசனங்கள் என்று அறியார் பலர். நெஞ்சால் பாம்பு ஊர்ந்து செல்வதைப்போல் செல்லும் குழந்தையின் செயல் கண்டு, பெருங்களிப்பு எய்தாத பெற்றோரும் உண்டோ? அவ்விளமைப் பயிற்சிகள், வளர்ச்சி பெற, வாய்ப்புப் பெறின், நோயிலா வாழ்வில் நூறாண்டு வாழ்வர் மக்கள். அறிந்து நடப்போர் அரிது. மக்கள் பிறவியின் பயனறியாது வாழ்வைப் பாழாக்குகின்றனர். பிறவியின் பாகுபாடு உணர்ந்து வாழ்க.

**“வேதநூற் பிராயம்நூறு மனிதர்தாம்**
**புகுவரேனும்**
**பாதியும் உறங்கிப்போகும் நின்றதிற்**
**பதினையாண்டு**
**பேதை பாலகனதாகும் பிணிபசி**
**மூப்புத்துன்பம்**
**ஆதலாற் பிறவிவேண்டேன்**
**அரங்கமா நகருளானே”**

(பிரபந்தம்)

**“மனிதற்கு வயது நூறல்லதில்லை**
**ஐம்பது இரவில் அகலுந் துயிலினால்**
**ஒட்டிய இளமையில் ஒரைந்து**
**நீங்கும்**
**ஆக்கை இளமையில் ஐமூன்று**
**நீங்கும்**
**எழுபதுபோக நீக்கிருப்பன முப்பதே”**

(கபிலர்)

மக்கள் விழித்து வாழும் நாட்கள் மிகச் சில. விழித்து வாழும் காலத்தே விழுமிய வாழ்வு வாழவேண்டும். விளம்பிதம் இன்றி விரைவில் வீறுபெற்று வாழ்க. வெள்ளம் வரும் முன்பே அணை போடுக. துன்பம் வரும் முன்பே தூய வாழ்வு வாழ முற்படுக. இடர் பல வந்துற்றாலும் இதயம் கலங்க வேண்டாம். தூய வாழ்வினைத் துணைக்கொள்க.

அலை சூழ் ஆழி. நிலைகுலையச் செய்யும் அலையையும் கருதாது ஆழியைக் கடக்க அம்பி—தோணி. கடுகிக் கடக்க மரக்கலத்தில் பாய்மரம். பாய்மரம் தூக்கி நிறுத்தி பாய்விரிக்கின்றனர். காற்றின் உதவி கொண்டு அலையையும் பொருட்படுத்தாது ஆழியில் மிடுக்காய் விரைந்து செல்கின்றது. பிறவிப் பெருங்கடல்—வாழ்வாகிய ஆழி. கடலலை போல்—பிணியாய அலைகள் அனந்தம். வாழ்வாகிய ஆழியில், நோயாம் அலைகடக்க, உடலாகிய மரக்கலம். உடல் உயிர் ஒன்றி உயர் வாழ்வுற காற்றாகிய உயிர் நிலை (யோக ஆசனம்). கைக் காசு செலவில்லா அரு மருந்து. ஆன்றோர் அமிழ்தென நமக்களித்துள்ள நற் கருவூலம். உணவு, ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் இதனைப் பயின்று நோய் களைந்து நீடு வாழ்க. ஆன்றோர் கழன்ற ஆசனம் பயின்று சான்றோராக வாழ்வது கடனே

**புன்னதர் புன்னெறி புணர்ச்சியின்**
**புன்மையும்**
**போக்கப் பாய்மரா சனம்பயில்.**

“வேலன்”

ஆசனம் பயிலும் வழி :—ஆசனம் பழகுமிடத்தில் அமைத்துள்ள விரிப்பின் மேல் மல்லாந்து படுக்கவும். ஓர் முறை ஆழ்ந்த மூச்சு ஒன்றை உள்ளிழுக்கவும். முடிந்த அளவு மூச்சை அடக்கவும். பின்னர் காற்றை வெளிவிட்டவாறே, “வலது” காலை உயர்த்தி—செங்குத்து நிலைக்கு—செங்கோணாசன நிலைக்குக் கொண்டுவரவும். வலது காலை உயர்த்தும் பொழுதே, இடது கையையும் மேலே உயர்த்திச் சென்று, “இடது கை” விரல்களால் “வலது கால்” பெருவிரலைப் பற்றுக. (முழங்காலை மடக்காதிருக்க முற்படுக.) வலது காலையும், இடது கையையும் உயர்த்தும் பொழுதே, தலையையும் தரையிலிருந்து உயர்த்துக. அது போழ்தே, “வலது” கையையும் உயர்த்தி, வளைக்காது, வலது காதை—ஒட்டியவாறே—தொட்டவாறே நீட்டி கை விரல்களையும் வளைக்காது சேர்த்தே தோணிபோல் நீட்டுக. வலது கால், இடது கை, வலது கைகளை உயர்த்தும் பொழுதே “இடது” காலையும் தரையிலிருந்து—வளைக்காது—உயர்த்தி, ஒரு

முழ உயரத்தில்—பாழி வேதிகையாசன நிலையில்—நிறுத்துக. (கைகள், கால்கள், தலை அனைத்தும் ஒரே சமயத்தில் தரையிலிருந்து உயரவேண்டும்.) குதத்தின் கதுப்புக்களும் — சூத்தாம்பட்டையையும் — கழுத்தின் கீழ்ப்பாகத்தையும் தரையிலிருந்து சிறிது உயர்த்துக. இவை அனைத்தும் ஒரே காலத்தே சேர்ந்தாற்போல் செய்யும் செயல்கள். இப்பொழுது நடு முதுகு மட்டுமே நன்கு தரையிலிருக்கும். பின்னர் மூச்சை உள்ளிழுத்து, நிறுத்தி வெளிவிடுக. இவ்வாறு செய்வது, தொடக்கத்தே சிறிது கடினமாயிருக்கும். காலைத் தூக்கும் பொழுது தலை உயராது. தலை உயரும் பொழுது கை உயராது. அவர்கள் கவலுதல் வேண்டாம். சுலப வழி: மல்லாந்து படுக்கவும். "வலது" காலை மடக்கி மார்பின் மேல் வைத்து, "இடது" கை விரல்களால் வலது கால் பெருவிரலைப் பிடிக்கவும். பிறகு வலது காலை, மேல் தூக்கி காலை வளைக்காது செங்குத்தாக நிறுத்துக. பின், இடதுகாலை வளைக்காது, தரையிலிருந்து ஒரு முழம் உயர்த்தி நிறுத்துக. அதன் பிறகு வலது கையைத் தரையிலிருந்து எடுத்து வலது காதைத் தொட்டாற்போல் வளைக்காமல் நீட்டுக. (படத்தை நன்கு கவனிக்கவும்) படத்தில் உள்ள நிலை வந்த பிறகு, மூச்சை உள்ளிழுத்து, நிறுத்தி வெளிவிடுக. 10, 15, விநாடி முதல் ஒரு நிமிடம் வரை நிறுத்துக. நன்கு பழக வந்தபின், சில நாட்களில்—முன் கூறிய நிலை—செய்தற்கு—எளிதே கை கூடும்.

இந்நிலையில் நோயுற்றோர் இரண்டு முதல் ஐந்து நிமிடங்கள் பழகலாம். நோயற்றோர் ஒன்று முதல் இரண்டு நிமிடங்கள் பழகலாம்.


கால்களை மாற்றியும் செய்ய வேண்டும். வலது காலை செங்குத்தாக நிறுத்தியது போல், "இடது" காலை செங்குத்தாக உயர்த்தி, "வலது" கை விரல்களால் இடதுகால் பெருவிரல் பற்றிச் செய்ய வேண்டும்.

சூலுற்ற பெண்டிர், சூலுற்று இரண்டு மாதம் முதல் பேறு முடிந்து இரண்டு மாதம் வரை இவ்வாசனம் பழகலாகாது.

இவ்வாசனம் பல்வேறு ஆசனங்களுக்கு அடிப்படை.

நன்மை:—கை கால் வீக்கம், வீக்கமின்று தடித்திருத்தல், சொறிய நீர் வடிதல், கைகால் முதுகு வலி பிடிப்பு நீங்கும். முதுகெலும்பிற்கு வலு.

**கைகால் விரல்வீங்கி நீர்வடியும் நோய் நீக்கும்**
**பாய்மர ஆசனம் பார்.** **"வேலன்"**



## 13. நங்கூர ஆசனம்

**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயிர் எல்லாந் தொழும்**
(குறள்-268)

**பாலும் பழமும் பச்சைக் காய்கறியும்**
**நாளும் கலந்துண்பீர் நன்கு.**
**"வேலன்"**

மாநிலத்தில் மக்களாய் பிறப்பது அரிது. அதிலும் நோயற்ற நல்லுடலில், மண்ணுலகில் நீடு வாழ்தல் அரிதினும் அரிது. ஆசனப் பயிற்சி அதிகம் என்? என எண்ணுபவர்களும் உண்டு. சர்க்கரை இனிப்பானது. அது பல்வேறு பொருள்களுடன் கலந்து, பக்குவப் படுத்தும்போது, உருவத்திலும், நிறத்திலும், சுவையிலும், குணத்திலும் எண்ணரிய வேறுபாடு அடைகின்றது. பல்வேறு பலகாரங்கள் ஏன்? வெறும் சர்க்

களையையே தின்றால் போதாதா? நினைத்துப் பார்க்க, நெஞ்சமே விடைகூறும். நோய்கள்தான் ஒன்றிரண்டா?

நமது முன்னோர்கள் வாழ்வில் யோகம் இரண்டறக் கலந்திருந்தது. தங்கள் உணவில் பால், பச்சைக் காய்கறிகள், கனிகள், கிழங்குகள் கலந்து உண்டு நோயற்று வாழ்ந்தனர். இவ்வாறு உணவு உட்கொண்டதனால் அவர்களின் அன்றாட உணவில் உயிர்ச் சத்துக்கள்—வைடமின் A, B, C, D, E முதலியன—மலிந்து கிடந்தன. கண்ணுக்குக் கண்ணாடியின்றி பார்த்து, படித்து, பழகியும் வாழ்ந்தனர். தற்போதோ, நோய்கள் பற்றி நினைத்தாலும் நெஞ்சம் நடுங்கும். பெயர் தெரியாது; புரியாது. புதுப் புதுப் பெயர்களுடன் புன்மை விளைக்கின்றன. உண்ணும் உணவில் உயிர்ச் சத்துக்கள் குன்றின. தவிடு நீக்கி, பன்முறை நீர்விட்டுக் களைந்து கழுநீர் நீக்கி, கஞ்சி வடித்த சோறு உண்கின்றனர். இதன் விளைவு எலும்புக்கூடுகளான காட்சி. கண்ணுக்குக் கண்ணாடி. கண்ணுக்குக் கண்ணாடி அணியாத குடும்பமே அரிதாகி விட்டது. ஆண்களும் பெண்களும் கண்களுக்குக் கண்ணாடி அணிவதை ஒரு நாகரிகச் சின்னமாகக் கருதத் துவங்கிவிட்டனர். கை, கால், காது, கழுத்து, மூக்கு முதலியவற்றிற்கு அணிமணிகள் பூணுதல் போல்...

***கண்ணுக்கு அணிகலன் கண்ணாடி—பாழே***
***கண்ணாடி யில்லாக் கண்.***

"வேலன்"

என்ற நிலை மேலோங்கிவிட்டது. காலம் அறிந்து உண்க. அளவறிந்து உண்க. அன்றாடம் உண்ணும் உணவில் பால், பழங்கள் கலந்துண்க. அன்றன்று அதிகாலை ஆசனம் பழகுக.

***உயிருடன் வாழ்வதற்கு உண்க—அஃதுண்பார்***
***ஊறின்றி நீடுவாழ் வார்***

"வேலன்"

நமது ஆன்றோர்கள் நமக்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ள அருமையான ஆசன வழிகள் அறிந்து பயில்க. நோய் வாராது காக்கும். நோயால் நொந்து நலிவோரின் நோய் நீக்கும். பழகி வாழப் பணம் வேண்டாம். உளம் வேண்டும்.

தலை தாழ்த்திப் படிக்கின்றோம், எழுதுகின்றோம். குனிந்து, நிமிர்ந்து பல்வேறு பணியாற்றுகின்றோம். சோர்வு அடைகின்றோம். பின்னர் தலை நிமிர்ந்தோ, தலையைப் பின்பிறம் தாழ்த்தியோ, கைகளைச் சிறிது உயர்த்தியோ, உடலை வலது புறமும் இடது புறமுமாக முறுக்கித் திருப்புகின்றோம். கைகளை மடக்கித் தோளில் வைத்து தலையைப் பின்புறம் தாழ்த்தி உடலை முறிக்கின்றோம். நெட்டை எடுக்கின்றோம். உடல் மீண்டும் பணியாற்றத் தயாராகின்றது. இவ்விதம் செய்யும் செயலை சோம்பல் முறித்தல்—முறிதல்-என்கிறோம். இவ்விதம் செய்வதால் களைப்படைந்த உடல் புத்துணர்வும், புது வலுவும் பெறுகின்றது. இஃதேபோல் நாம் செய்யும் செயல்கள் ஒவ்வொன்றிலும் களைப்பு மேலிடும் போழ்து சோம்பல் முறிக்கின்றோம்.

இரவில் தூங்குகிறோம். காலையில் விழிப்பு அடைந்த உடனேயே, படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டோ, அல்லது எழுந்து நின்று கொண்டோ சோம்பல் முறிக்காத மக்களே இரார். சிலர் படுக்கையில் படுத்துக்கொண்டும் இடதுபுறம், வலதுபுறம் திரும்பி உடலை முறிக்கிச் சோம்பல் முறிப்போரும் உளர். ஏன்? உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் சோம்பல் முறிக்கின்றன. நாய்களும் பூனைகளும் இவ்வாறு சோம்பல் முறிப்பதைப் பெரும்பான்மையோர் கண்ணுற்றிருப்பர்.

முன்னால் உடலை வளைத்துப் பல பயிற்சிகள் செய்கின்றோம், இஃது முடிந்தவுடன் பின்னாலும் உடலை வளைத்துப் பயிற்சி செய்ய வேண்டும். உடலை இடது புறம் வளைத்து முறுக்கினால், பிறகு உடலை வலது புறம் வளைத்து முறுக்க வேண்டுவது மிகவும் முக்கியம். இன்றேல் உடலுக்கு ஊறு ஏற்படும். முன்னால் குனியும் பயிற்சிகளையே செய்துவந்தால் முதுகெலும்பு முன்னால் வளைந்து கூன் விழ ஆரம்பித்துவிடும். வலது அல்லது இடது பக்கமாக ஏதே

னும் ஒரே பக்கமாகப் பயிற்சிகள் பழகிடில் உடல் அப்பக்கமே வளைந்து ஊறு விளைக்கும். ஆதலின் பயிற்சிகள் வலது, இடது, முன்புறம் பின்புறம் என்றவாறு மாற்றி மாற்றிப் பழக வேண்டுவது மிகவும் முக்கியம்.

நின்று கொண்டு உடலைப் பின்னால் வளைத்துத் தலையைத் தாழ்த்தும் ஓர் நிலைக்கு நங்கூர ஆசனம் என்று பெயர். அலைகடலில் ஆடித்திரியும் மரக்கலம்-கப்பல். அதை ஓரிடத்தே நிலைபெறச் செய்ய—ஓய்வு பெற—நங்கூரம் பாய்ச்சுகின்றனர். மரக்கலத்திற்கு—கப்பலுக்கு—நங்கூரம் உதவி செய்து அலைகடலில் பாதுகாப்பளிக்கிறது. கப்பலுக்கு நங்கூரம் போன்று, மக்களுக்கு நிலைப்பெற்ற நல்வாழ்வு வாழ நங்கூர ஆசனம் உதவுகின்றது.

**நங்கூர ஆசனம் நாள்தோறும் கற்பவர்**
**மங்கின்றி வாழ்வர் மகிழ்ந்து.**

"வேலன்"

**ஆசனம் பயிலும் வழி** :—ஆசனப் பயிற்சிக்கு அமைந்த இடத்தே நேராக நிமிர்ந்து நிற்கவும். குதிகால்கள் சேர்ந்திருக்க வேண்டும். கால் பெருவிரல்களிரண்டும் பிரிந்து—ஒரு சாண் இடைவெளியில்-அகல இருக்க வேண்டும். இரு கைகளையும் கூப்பி மார்பில் வைத்து அஞ்சலி செய்கின்றோம். இஃதே போல் முதுகின் புறத்தே—நடு முதுகில் இரு கைகளையும் சேர்த்து அஞ்சலி செய்க. ஓர்முறை நிதானமாக மூச்சை உள்ளிழுத்து நிறுத்தி வெளிவிடுக. பிறகு மூச்சை உள்ளிழுத்தவாறே, தலையை முடிந்த அளவு பின்புறம் தாழ்த்துக. தலையைத் தாழ்த்தும்போதே, இரு முழங்கால்களை மட்டும் சிறிது இடைவெளியிருக்குமாறு—ஒன்றையொன்று தொடாதவாறு—அகலச் செய்யவும். தலையைத் தாழ்த்தும் போழ்தே முழங்கால்களும் தானே பிரியத் தொடங்கும். ஓட்டைச்சாண் அளவுள்ள இடைவெளி போதுமானது. மிகவும் நிதானமுடன் செய்க. தலையைத் தாழ்த்திய நிலையிலிருந்தவாறே மூச்சை நிறுத்தி, வெளியேற்றுக. பத்து முதல் முப்பது விநாடிகள் வரை நிறுத்திப் பழகுக. பின்னர் தலையை உயர்த்தும் பொழுது, மூச்சை வெளி விட்டவாறே உயர்த்து. ஓரிரு விநாடி ஓய்வு எடுத்துக்கொண்டு மீண்டும் மூன்று அல்லது நான்கு முறை செய்யலாம். ஒரு வாரம் பயிற்சி யடைந்த பின் ஒரேதடவையில், ஒரு நிமிடம் முதல் இரண்டு நிமிடங்கள் வரை இவ்வாசனம் பயிலலாம்.

கைகளைப் பின்புறம் கூப்புவது சிறிது கடினமாயிருக்கும். முதலில் கைகளைப் பின்புறம் கூப்பி—விரல்களின் நகங்கள் தரையை நோக்கி இருக்கச் செய்க—அதாவது கை கூப்பியவாறே கைப் பெருவிரல்கள் இரண்டும் நடு முதுகைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். பிறகு நிதானமாக, கைவிரல்களின் நகங்கள் முதுகெலும்பைத் தொட்டவாறே புறட்டி இரு சுண்டு விரல்களும் முதுகெலும்பைத் தொட்டவாறு இருக்கச் செய்க. இப்பொழுது கைவிரல் நகங்கள் தரையை நோக்காது, தலையை நோக்கியிருக்கும். கூப்பிய கைகளைப் பிரிக்காது இவ்விதம் செய்க. பழகப் பழக எளிதே வரும்.

ஒரே நாளில் தலையை அதிகம் தாழ்த்தப் பழக வேண்டாம். ஒவ்வொரு நாளும் பழகும்போது உடலைப் பின்னால் வளைப்பதையும், தலையைத் தாழ்த்துவதையும் படிப்படியாக அதிகப் படுத்திக் கொள்க. படத்தைப் பார்த்து நன்கு பழகுக. மேலும் சுவற்றோரமாகவும் முதலில் செய்யப் பழகலாம். சுவற்றோரம் ஒருமுழம் தள்ளி முதுகு சுவற்றைப் பார்க்குமாறு கைகூப்பி நிற்கவும். மூச்சை உள்ளிழுத்தவாறே—கை கூப்பியதைப் பிரிக்காமல்—தலையைப் பின்னுக்குத் தாழ்த்தி தலையால் சுவற்றைத் தொட்டுப் பழகத் தொடங்கியும் - இப்பயிற்சிக்கு வரலாம்.

கைகளைப் பின்னால்—சாதாரணமாகக் கட்டிக் கொண்டும் இப்பயிற்சி செய்வர் சிலர். ஆயினும் கூப்பிய கைகளுடன் செய்வதே சாலச் சிறந்ததும் சரியான நிலையுமாம்.

**நன்மை** :—வாழ்விற்கு அடிப்படையான முதுகு எலும்பு வலுப்பெறும்.

கூம்பிய மார்பு நன்கு விரியும். மூளையும் நரம்புத் தொகுதிகளும், இதயமும், நுரையீரலும் நன்கு இயங்கும். நீடித்து உழைக்கும். கைகள், மணிக்கட்டு, தோள்பட்டை வலுவடையும். வயிற்றுச் சதைகளும், குடல்களும் நன்கு இழுக்கப்பட்டு நீண்டபின் சுருக்கப்படுவதால் பெரு வயிறு ஒழியும். வயிறு அழகுடன் வலுப் பெறும். குடல் சார்பான நோய்களும் நீங்கும். நன்கு பசியெடுக்கும். கழுத்திற்கு நல்ல பயிற்சி. முகம் அழகு பெறும். கழுத்தைச் சுற்றியுள்ள நரம்புகளும் நல்ல வலுவடையும். பல்வேறு கோளங்களும் நல்லுணர்வு பெற்று நல் வாழ்விற்கு உறுதுணையாகின்றன.

சூலுற்ற பெண்கள் செய்யக்கூடாது.

(தொடரும்)

---


**ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்**

## நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

| | | | அ. | பை |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | 5 | 0 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | .... | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | 7 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | 7 | 6 |

**எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.**

## கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)
J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. Ed. திருத்தியமைத்தது

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | அணா | 5 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | ,, | 6 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | .... | ,, | 10 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | ,, | 13 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | ,, | 14 |

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# ஆசிரியர் நிலையை உயர்த்த வழிகள்

## த. நா. கா. க. உப கமிட்டி ஆலோசனை

தாமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியால் நியமிக்கப்பட்ட கல்வி உப கமிட்டி மதுரையில் 10, 11-ந்தேதிகளில் கூடியது. அங்கத்தினர்கள் ஸ்ரீ சாம்பசிவ ரெட்டியார், எம். எல். ஏ., ஸ்ரீ எம் எஸ். செல்வ ராஜன், ஸ்ரீ வி. ராஜகோபால அய்யர், ஸ்ரீ வி. பூவராக மூர்த்தி, ஸ்ரீ வி. நடராஜன் (முன்னாள் பள்ளிக்கூட டிவிஷனல் இன்ஸ்பெக்டர்) ஆகியோர் வந்திருந்தனர்.

ஆசிரியர் ஸ்தாபனங்களின் பல்வேறு கோரிக்கைகள் பற்றி கமிட்டி ஆலோசித்தது. வாழ்க்கைக்குப் போதிய அடிப்படை சம்பள நிர்ணய பிரச்னை பரிசீலனை செய்யப்பட்டது. ஆசிரியர்கள் தரத்தை புனர் பயிற்சியால் உயர்த்துவதுபற்றியும் விவாதிக்கப்பட்டது.

பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க தனியாரைவிட ஸ்தல ஸ்தாபனங்கள் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பதிவு செய்யப்பட்ட ஆசிரியர் ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற்கே ஊக்கமளிக்க வேண்டும் என்றும் நிர்வாகிகள் ஆசிரியர்கள் ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பதவசியமென்றும் அபிப்பிராயம். சமுதாயநல, கிராமத் திருப்பணித் திட்ட அதிகாரிகள் மேற்பார்வை வேலைகளுக்கு ஆசிரியர்களை பயன்படுத்தி அவர்களின் அதிக சம்பாத்யத்துக்கு வகை செய்ய வேண்டும் என்றும், கௌரவ பதவிகள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் இன்ஸ்பெக்டர்களாக அதிக ஆசிரியர்கள் பொறுக்கப்பட வேண்டும் என்றும் ஒரு பள்ளியிலிருந்து வேறு பள்ளிக்கு மாறும் ஆசிரியருக்கு சம்பள அனுகூலம் தரப்பட வேண்டும் என்றும் கமிட்டி கருதியது.

பிராவிடெண்ட் நிதி இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஆராயப்பட்டது. பிராவிடெண்ட் நிதிக்கு அதிக வட்டி தரப்பட வேண்டும் என கேட்கப்பட்டது. இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட முடியாத ஆசிரியர்களுக்கு கிராடியுடி அளிக்கும் திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் குழந்தைகளுக்கு பள்ளிச் சம்பள வஜா அளிக்கவும் சிபார்சு செய்யப்பட்டது.

கிராம ஆசிரியர்கள் நிலையை உயர்த்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. ஒவ்வொரு ஸ்கூலுக்கு அல்லது சில ஸ்கூல்களுக்கு அருகாமையில் உணவு தான்யங்கள் உற்பத்திக்கு ஒரு பண்ணையும், தொழில்கள் ஏற்படுத்தவும், விளைச்சல் உற்பத்தியை ஆசிரியர்களிடையே பங்கிடவும், திட்டமிடப்பட்டது. இதனால் ஆதாரக் கல்வியில் பரீட்சைகள் புரிய தோது ஏற்படும். இது பற்றிய திட்டம் பிறகு உருவாகும்.

## சுதேசமித்ரனின் அபிப்பிராயம்

பள்ளிக்கூட ஆசிரியர்களின் ஊதியத்தையும், அந்தஸ்தையும் எவ்வாறு உயர்த்துவது? இப்பிரச்னை பற்றி ஆராய்ந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த ஒரு சப் கமிட்டி இதற்குச் சில குறுக்கு வழிகள் இருப்பதாகக் கூறுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு குறித்த அளவு நிலமும், சில தொழில்களை நடத்துவதற்கான வசதிகளும் அளிக்கலாம்; அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் செலவு போக மிஞ்சுவதை ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளட்டும் என்பது அந்த சப் கமிட்டியின் யோசனைகளில் ஒன்று. இந்த ஏற்பாட்டின்கீழ் ஆதாரக் கல்வி முறையும் சிறக்க நடந்தேறும்; இதே சமயத்தில் விவசாயத்திலும், மற்ற சிறு தொழில்களிலும் புது முறைகள் கையாளப்படுவதன் மூலம் அந்தந்த கிராமம் முழுதும் அனுகூலம் பெறவும் இடமிருக்கிறது என்பது அக் கமிட்டியின் மதிப்பீடு. அது எதிர்பார்ப்பது போல், மேற்குறித்த எல்லா நோக்கங்களும் சிறக்க நடந்தேறுமாயின் அது கண்டு நம்மைவிட அதிகமாக ஆனந்திக்கக் கூடியவர்கள் யாருமில்லை. ஆனால் மனிதனின் இயற்கை குணத்தை மறந்து திட்டம் போடுவதில்

பயனில்லை. அக் கமிட்டி எதிர்பார்ப்பது போல் குறை சொல்ல இடமில்லாமல் நடந்துகொள்ளக் கூடிய ஆசிரியர் யாரும் இருக்க முடியாதென்று நாம் சொல்லவில்லை. ஆனால் பெரும்பாலோரின் இயற்கையான நடைமுறை யாதாயிருக்கும் என்பதே முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம்.

தங்கள் ஊதியம் பள்ளியைச் சேர்ந்த நிலத்தின் விளைவையும், பள்ளியில் நடக்கும் தொழில்களின் உற்பத்தியையுமே பொறுத்ததென ஆசிரியர்கள் எண்ண நேருமாயின் அந்நிலையில் அவர்களது கவனம் முழுதும் எங்கு திரும்பும்? சீரான ஒரு கல்வியை சிறுவர்களுக்குப் புகட்டுவதில் அவர்களுக்கு சிரத்தை இருக்குமா, அல்லது கூடியவரை அக்குழந்தைகளின் உடலுழைப்பைக் கொண்டு தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதிலேயே ஆசிரியர்களுக்குத் திருஷ்டியிருக்குமா என்ற கேள்விக்கு சாதாரணமாக ஒரே ஒரு விடைதான் சாத்தியம். பள்ளிக்கூடங்களையெல்லாம் இளம் பாலர்களை வேலை வாங்கும் தொழிற்சாலைகளாக மாற்றிவிடத்தக்க இந்த யோசனையை பெற்றோர் யாரும் வரவேற்பதற்கில்லை.

மேற்குறித்தது போன்ற குறுக்கு வழிகளுக்குப் பதிலாக ஒவ்வொரு கிராமத்திலும் ஆசிரியர்களுக்கென்று நிலமான்யம் கொடுக்கும் ஒரு முறையை அமுலுக்குக் கொண்டுவருவது தாமல்லவா என்று அதிகாரிகள் யோசிக்க வேண்டுகிறோம். கிராம சமுதாயத்துக்கு ஒவ்வொரு வகையிலும் ஊழியம் புரிவோர்க்கு தான்யமாகவோ அல்லது நிலமாகவோ மான்யம் கொடுப்பது நமக்குப் புதிதல்ல. சமீப காலம்வரை அவ்வேற்பாடு சிறக்க இயங்கி வந்திருக்கிறது. தற்போது ஆசிரியர்களின் காலக்ஷேபத்துக்கு வேண்டிய அளவு நிலத்தை ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய பொது நிலத்திலிருந்து ஒதுக்கிவைக்கலாம். அது இல்லாத இடங்களில் தனிப்பட்டவர்களிடமிருந்து அந்த அளவு நிலத்தை சர்க்கார் ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டும். பூதான இயக்க மூலம் கிடைத்துள்ள நிலங்களை இத்தகைய நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதோடு சமுதாய க்ஷேம நலத் திட்டம், தேசிய விஸ்தரிப்பு சேவைத் திட்டம் முதலியவற்றை நிறைவேற்றுவதில் ஆசிரியர்களின் சேவையைக் கூடியவரை பயன்படுத்திக் கொள்வதும் அவர்களது ஊதியம் உயர உதவும். பட்டணங்களிலுள்ள ஆசிரியர்களைப் பற்றியவரை, அவர்களது ரொக்க ஊதியத்தை ஒரு குறைந்தபட்ச அடிப்படையில் உயர்த்துவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

விசேஷ கௌரவம் அல்லது அந்தஸ்துக்கு அறிகுறியாயுள்ள பதவிகளை ஆசிரியர்களுக்கு அளிக்கலாமென்ற மேற்குறித்த சப் கமிட்டி யோசனையை நாம் மனப்பூர்வமாக அங்கீகரிக்கிறோம். இவ்வாறே, தனிப்பட்டவர்களுக்குப் பதிலாக ஸ்தல ஸ்தாபனங்களும், ஆசிரியர்களின் கூட்டுறவுச் சங்கங்களும் புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த ஊக்கமளிக்கப்படவேண்டுமென்ற யோசனையும் நம் ஆதரவுக்கு உரியது. இது வரவர விசேஷமாக அமுலுக்கு வருவது காரணமாக ஆசிரியர்களுக்கு ஸ்திரமான வேலை கிடைப்பதுடன், அவர்களது சம்பளத்தையும், மற்ற சௌகரியங்களையும் கூடியவரை ஒரே சீராக்குவதற்கான வசதிகள் பெருகுவதும் திண்ணம்.

(சுதேசமித்ரன்—15—7—54)

# செய்தித் திரட்டு

(1) ஆரம்ப ஆசிரியர் சங்கம், மணலூர்பேட்டை.

ஷை சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 3-7-54ல் மணலூர்பேட்டை போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலையில், ஸ்ரீ அப்துல் அஜீஸ் அவர்கள் தலைமையில் கூடிற்று. உதவி காரியதரிசி ஸ்ரீ V. வெங்கடநாராயணன் கடவுள் வணக்கம் பாடினார். சங்க காரிய தரிசியால் நிகழ்ச்சி வாசிக்கப்பட்ட பின் ஸ்ரீ B. சுப்ரமண்யன் "ஸ்தல பூகோளம் போதிப்பதும் அதன் பயனும்" என்பது பற்றியும், ஸ்ரீ D. கிருஷ்ணமூர்த்தி பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளை அதிகம் சேர்ப்பதைப்பற்றியும் மிகவும் விளக்கமாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் சங்கக் காரியதரிசி ஸ்ரீ D. கிருஷ்ணமூர்த்தி வந்தனோபசாரம் கூற தேசியகீதத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

(2) ஸ்ரீ சாரதா உயர்தர ஆரம்பப் பாடசாலை, மாம்பலம்.

1. 1-5-54 அன்று பாஷா அபிவிருத்தினி சங்கத்தின் 19-ம் ஆண்டுத் துவக்க விழா நடைபெற்றது. தியாகராய நகரிலுள்ள தரும ஆதீனச் சமயப் பிரசார நிலையத் தலைவர் வித்வான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தலைமை வகித்து துவக்கச் சொற்பொழிவு நிகழ்த்தி மாணவர்களை தமிழ் இலக்கியங்களை நன்கு பயிலுமாறு கேட்டுக்கொண்டார்.

2. 15-7-54 அன்று மேற்படி பள்ளியின் உபாத்திமைச் சங்கத்தை ஸ்ரீ S சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் (Retired D. E. O.) துவக்கி வைத்து, ஆசிரியர்கள் தற்கால விஷயங்களை நன்கு அறிந்து அவற்றிற்கேற்றவாறு போதனை செய்யவேண்டும் என்றும், மதம், தெய்வ நம்பிக்கை சம்பந்தமாக மாணவர்களை நல்லவழியில் பயிற்றவேண்டும் என்றும் கூறினார்.

3. 19-7-54, அன்று சத் சங்கத்தின் துவக்க விழா நடைபெற்றது. அடையாறு ஆரோக்ய ஆசிரமத் தலைவர் ஸ்ரீ வெங்கடேஸ்வரானந்தா அவர்கள் துவக்கி வைத்து, "குருபக்தி" என்னும் தலைப்பில் அரியதோர் பிரசங்கம் செய்தார்.

4. 22-7-54 அன்று மேற்படி பள்ளிக்கு கவியோகி சுத்தானந்த பாரதி அவர்கள் விஜயம் செய்தார். பூர்ண கும்பத்துடன் வரவேற்கப்பட்ட சுத்தானந்தர் மாணவ மாணவிகளை ஆசீர்வதித்துப் பேசுகையில் "தெய்வ நம்பிக்கை மிகவும் தேவை. இளம் வயதிலேயே சிறுவர்கள் நற்குணங்களில் பழகுதல் வேண்டும். சம்ஸ்கிருதம் படிக்க வேண்டும், யோகாஸனங்கள் பயிலவேண்டும்" என்று கூறினார். அவ்வமயம் யோகியவர்களால் இயற்றப்பட்ட பல பாடல்கள் பாடப்பட்டன, பாடல்களுக்கு அபிநயம் பிடிக்கப்பட்டது.

(3) வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்.

சென்னை வட்டாரத்தின் ஜெனரல் ஆபீசர் கம்மாண்டிங் உயர்திரு. மேஜர் ஜெனரல் ஜே. சி. கட்டோச் அவர்கள் வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு 24-7-54 அன்று வருகை புரிந்து பாடசாலை மிகவும் உயர்ந்த முறையில் நடத்தப் பெற்று வருவதைக் கண்டு மகிழ்ந்தார். பின்பு நடந்த மாஜி இராணுவத்தினர் கூட்டத்தில் பேசுகையில் எல்லாவகைகளிலும் குழந்தைகளுக்குச் சிறந்த பயிற்சி கொடுத்துவரும் இந்துமத பாடசாலைக்கு அவர்கள் குழந்தைகளையெல்லாம் அனுப்ப வேண்டும் என்று கூறினார்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் சார்பில் அமைந்துள்ள வள்ளலார் மாணவர் இல்லத்தில் உணவுக்கூடம் அமைக்க செங்கற்பட்டு நகராண் கழகத் தலைவர் இராவ்பகதூர் மே. வேதாசல முதலியார் அவர்கள் ரூ. 20,000 (இருபதாயிரம்) நன்கொடை யளித்தார். உலகப் பேரறிஞரும் இப்பொழுது திருவாங்கூர் கொச்சி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமான திவான்பகதூர் டாக்டர் சர். ஏ. இராமசாமி முதலியார், கே சி. எஸ். ஐ., டி.சி.எல். (ஆக்சன்) அவர்கள் கால்கோள் விழா ஆற்றினார்கள்.

மைசூர் மண்ணெண்ணெய் பெட்ரோல் வாணிபம் உயர்திரு வி. கே. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் தம் வீட்டரசியார் கமலம்மாள் பெயரால் பாடசாலையில் ஒரு அறை அமைக்க ரூ. 2,000ம்; சென்னையில் ஸ்பிரிட் வேர் ஹவுஸ் உரிமையாளரான உயர்திரு. எஸ். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தம் அன்னையார் திருமதி

ஜானகியம்மாள் பெயரால் ஒரு அறை அமைக்கப் பொருளுதவியும் செய்தார்கள். திருமதி கமலம்மாள் படத்தை இராவ் பகதூர் மே. வேதாசல முதலியார் அவர்களும், திருமதி ஜானகியம்மாள் படத்தை சென்னை மாகாண கல்வித்துறையின் முன்னாள் டெபுடி டைரக்டர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும் திறந்து வைத்தார்கள். மைசூர் உயர்திரு. வி. கே. கோவிந்தராஜ முதலியார் அவர்களும், சென்னை, செங்கற்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலிருந்து பெருமக்கள் பலரும் விழாவிற்கு வந்தது குறிப்பிடத் தக்கது.

(4) ஆரம்ப ஆசிரியர் சங்கம், திருவெண்ணெய்நல்லூர்.

10-7-54 சனிக்கிழமை மேற்படி சங்கம் திருக்கோயிலூர் ரேஞ்சு உப-கண்காணிப்பாளர் ஸ்ரீ ஆர். தியோடர் தலைமையில் கூடிற்று. இசைப்பாட்டு சொக்கலிங்கத்தால் விரிவாகப் பாடப்பட்டது. ஸ்ரீ ஜெஸ்லி அம்மாளால். பூகோளப் பாடம் 3-வதுக்கு கற்பிக்கும் முறை விவரித்துக் காட்டப்பட்டது. தலைவர் முடிவுரையில் ஆசிரியர் கடமையையும் முறைகளையும் எடுத்து விரிவாகச் சொன்னார். காரியதரிசி ஸ்ரீ. S. V. கோதண்டராமனால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

(5) திருச்சி ஜில்லா லேபர் ஆசிரியர் யூனியன்

16-7-54ல் இந்த யூனியன் சார்பில் நிர்வாகஸ்தர்கள், கமிட்டி மெம்பர்கள் ஆகியவர்களால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திருச்சி ஜில்லா நல அதிகாரி உயர் திரு. G. ஸ்டீபன், M. A. அவர்களைப் பேட்டிக் காணப்பட்டது. அவ்வமயம் மாவட்ட பொதுக் காரியதரிசி திரு. பி. எஸ் அந்தோணிசாமி அவர்களால், 29-4-54ல் சென்னை ராஜ்ய ஹரிஜன் நல டைரக்டர் அவர்களைப் பேட்டிக் கண்டபோது எடுத்துக் கூறிக் கொள்ளப்பட்ட குறைபாடுகளும், அவை சம்பந்தமாக டைரக்டர் அவர்கள் கூறிய பதில்களும் எடுத்துக் கூறப்பட்டன.

இவற்றிற்கு நல அதிகாரி அவர்கள் 29-4-54ல் டைரக்டர் அவர்களை யூனியன் பேட்டிக் கண்டதின் பயனாக பல பயன்கள் கிட்டியுள்ளதாகவும், அவற்றுள் குறிப்பாக சம்பள பாக்கி விஷயமாக 15-7-54 முதல் இவ்வலுவலகத்தில் ஐந்து நாட்கள் தங்கி ஆசிரியர்களின் சர்வீஸ் ரிஜிஸ்தரை தணிக்கை செய்ய மூவர் மதருஸிலிருந்து வந்து வேலை செய்வதாகவும், இவர்களது ஆடிட் வேலை முடிந்ததும் விரைவில் பாக்கி வழங்கப்பட இருக்கும் என்றும், சம்பளம் கிடைப்பதில் காலதாமதம் கஜானாவில் ஏற்படுகிறதென்றும், இதைத் தவிர்க்க அவர்களுக்கு அறிக்கை இடப்பட்டிருப்பதாகவும், பொதுவாக சகல குறைகளையும் கவனித்து நிவர்த்தி செய்வதாகவும் சுமார் ஒருமணி நேரம்வரை அன்புடன் உரையாடினார்கள். மேலும், தாம் பார்வையிட்ட பல பள்ளிகளில் கால அட்டவணை, கணித போதனை முதலியன சரியாயில்லை என்றும் அவைகளை ஆசிரியர்கள் களையவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். இவ்விஷயத்தை ஆசிரியர்களுக்கு அறிவிப்பதாக காரியதரிசியால் கூறப்பட்டது. பின் யூனியன் சார்பில் நன்றியும் வணக்கமும் செலுத்தி வரப்பட்டது.

(6) ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா ஆரம்ப ஆசிரியர் யூனியன் பொதுக்கூட்டம்

நமது யூனியன் பொதுக்கூட்டம் 25-7-54 ஞாயிறு மாலை 4 மணிக்கு தூத்துக்குடி மீனாக்ஷீபுரம் ஆரம்ப பாடசாலையில் யூனியன் நிரந்தரத் தலைவர் திரு K.V. கோபால அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கடவுள் வணக்கத்திற்குப் பின் காரியதரிசி திரு V. R. செல்லத்துரை அவர்களால் முன்கூட்ட நடவடிக்கைகள் வாசித்து யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டன. அக்கூட்டத்தில் சுமார் 22 பேர்கள் அடங்கிய ஓர் செயல்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

நமது யூனியனின் நடப்பு வருடத்திய அதாவது 1954 ஜூன் முதல் 1955 மே முடிய ஒரு வருட சந்தா அங்கத்தினர் ஒவ்வொருவரும் அணா நான்கு மட்டும் தவறாது கடமையை உணர்ந்து செலுத்தும்படி யாவராலும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

திரவிய சகாயம் பெறும் மானேஜர்களைக் கண்டுபேசி தற்சமயம் சர்க்காரால் உயர்த்தப்பட்டிருக்கும் மூன்று ரூபாய் சம்பள உயர்வை தற்போது ஆசிரியர்கள் வாங்கும் சம்பளத்தோடு சேர்த்துக் கொடுக்கப்படவேண்டுமென்று சிபார்சு செய்ய 12 பேர் அடங்கிய ஓர் குழு நியமிக்கப்பட்டது. பின்னர் அடியில்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன. அவையாவன:

1. ஆரம்ப ஆசிரியர்களுக்கு இப்பொழுது சர்க்காரால் உயர்த்தப்பட்டிருக்கிற ரூபாய் மூன்றையும் தற்பொழுது வாங்கி வரும் சம்பளத்தோடு கூட்டித்தர மானேஜ்மெண்டாருக்கு உத்தரவு பிறபிக்கும்படி சர்க்காரை இந்த யூனியன் கேட்டுக்கொள்கிறது.

2. 10 வருடம் சர்வீஸ் உள்ள ஓர் ஆரம்ப ஆசிரியர் S. S. L. C. பரீட்சை எழுதி தேறிவிட்டால் அவரது சர்டிபிக்கேட்டை செகண்டரி கிரேட் சர்பிகேட்டாக மாற்றிக் கொடுக்கும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

3. பத்து வருடம் சர்வீஸ் உள்ள செகண்டரி கிரேட் ஆசிரியர்களை ஜூனியர் டிபுடி இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கும்படி இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது. அவர்களில் குறைந்த பக்ஷம் 30 சத வீதமாவது ஆரம்ப ஆசிரியர்களாக வேலை பார்த்தவர்களாயிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

4. ஆரம்பப் பள்ளியில் வேலை செய்யும் செகண்டரிகிரேட் ஆசிரியர்களுக்கு செகண்டரி பாடசாலையில் வேலை செய்யும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களைப்போல் சம்பளமும், கிராக்கிப்படியும் சம்பள உயர்வையும் கொடுக்கும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

5. திரவிய சகாயம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு முனிசிபல் பாடசாலையில் வேலை செய்யும் ஆசிரியர்களைப்போல் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கும்படி இச்சங்கம் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. ஆசிரியர்கள் தங்களுடைய பிராவிடண்டு பண்டுக்கு தற்போது கட்டிவரும் $\frac{1}{16}$ பாகத்தை $\frac{1}{8}$ பாகமாக உயர்த்த உத்தரவு பிறப்பிக்கும்படி இச்சங்கம் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7 ஜில்லா ஆசிரிய கில்டுடன் நமது யூனியனை இணைப்பதற்குரிய சந்தா ஐந்து ரூபாயைச் செலுத்தி இணைக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

8. திருநெல்வேலிக்குப் போய் கனம் மந்திரி அவர்களைக்கண்டு பேசி சில முக்கிய தீர்மானங்களை சமர்ப்பிக்க நமது யூனியனிலிருந்து இருவரை அனுப்ப ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு அன்னவர்கள் பிரயாணச் செலவுக்கு மொத்தம் ரூபாய் எட்டு மட்டும் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

திரு M. துரைச்சாமி அவர்கள் யூனியன் அங்கத்தினர்களின் கடமையையும் ஒத்துழைப்பையும் பற்றி பொருட் சுவையுடன் உற்சாகமாகப் பேசினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையில் ஆசிரிய ஆசிரியை யாவரும் தன்னுடன் ஒத்துழைத்து இச்சங்க நிர்வாகத்தை பொறுப்புடன் இனிமைபெற நடக்க உதவி புரியவேண்டுமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டார்கள். அதன் பின்னர் திரு. பார்த்தசாரதி அவர்கள் யூனியனின் தற்போது தலைவரைப்பற்றி சில நல்லுரைகள் கூறி வந்தனோபசாரம் கூறினார்கள். எல்லோரும் எழுந்து தேசிய கீதம்பாட கூட்டம் இனிது முடிவுற்றது.

### (7) ஆரம்ப ஆசிரியர் சங்கம், சங்கராபுரம் வட்டம்.

31-7-54ல் சங்க ஆண்டுவிழா கோபால கிருஷ்ணா டாக்கீஸில் தென் ஆற்காடு ஜில்லா கல்வி அதிகாரி திரு. V. அனந்தராஜ் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. கள்ளக்குறிச்சி கண்காணிப்பாளர் ஸ்ரீ E. S. சிவக்கொழுந்து பிள்ளை வரவேற்புரை கூறினார். காரியதரிசி ஆண்டு அறிக்கை வாசித்தார் திரு R ராமமூர்த்தி ஆசிரியர் நிலை பற்றியும், ஆரோக்யசாமி ஆசிரியர் முன்னேற்றம் பற்றியும், K. நந்தகோபால் கம்பர் கவி நயம் பற்றியும், G. சின்னப்பன் திருக்குறள் பற்றியும் பேசினார்கள். கட்டபொம்மன் நாடகம், கும்மி கோலாட்டம், சில காமிக் நிகழ்ச்சிகளும் நடத்திக் காண்பிக்கப்பட்டன. தேனீர் விருந்துக்குப் பின் காரியதரிசி A. ஜெயராமன் நன்றிகூறிய பின் தேசிய கீதத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### (8) சொக்கலிங்க வித்தியாசாலை, லெட்சுமி புரம்

6-8-1954ல் ஸ்ரீ சுந்தரர் விழா வித்தியாசாலை உதவி ஆசிரியர் திரு S. சண்முகம் அவர்கள் தலைமையில் கொண்டாடப் பெற்றது. இறை வணக்கத்திற்குப்பின் ஸ்ரீசுந்தரர் பெருமை பற்றித் தலைவர்களால் எளிய முறையில் எடுத்துரைக்கப் பெற்றது. சொ. வி. மாணவ மாணவிகள் சுந்தரர் தேவாரப் பதிகங்களைப் பண்ணுடன் ஓதினார்கள். கும்மி கோலாட்டங்கள் நடைபெற்றன. தலைவர் முடிவுரைக்குப் பின் உதவி ஆசிரியர் திரு. S. ராமநாதன் நன்றிகூற நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

(9) ஆரம்ப ஆசிரியர் சங்கம், திருவெண்ணெய்நல்லூர்

7-8-54ல் மேற்படி சங்கம் ஸ்ரீ R. S. சுப்பிரமணியம், B. A, திருக்கோயிலூர் வட்டம், கூட்டுறவு சங்கங்களின் டிப்டி ரிஜிஸ்டிரார் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. ஸ்ரீ சொக்கலிங்கம் அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு சங்க நிகழ்ச்சிகள் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. 1954–55 வருஷத்திற்கு புதியதாக நிர்வாகஸ்தர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர். பிறகு ஸ்ரீ R. சுந்திரம், திருக்கோயிலூர், இன்ஷூரென்ஸ் இன்ஸ்பெக்டர் "தற்போது நிலைமையும், சர்க்கார் பாதுகாப்பும், செய்யும் நன்மைகளையும்" பற்றி விரிவாக எடுத்துக் கூறினர். சேமிப்பு விஷயமாயும், இன்ஷூரன்ஸ் செய்வதைப்பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். தலைவர் முடிவுரையில் கூட்டுறவு சங்கத்தின் நன்மைகளைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார். கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொருவரும் அங்கத்தினர்களாகச் சேரவேண்டும். பிள்ளைகளுக்கு உபாத்தியாயர்கள் கூட்டுறவு சங்கத்தைப்பற்றி இலகுவாகப் போதிக்கவேண்டும் என்று கூறி முடித்தார்.

(10) போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை மாணவர் சங்கம், திருவெண்ணெய்நல்லூர்

13-8-54ல் மேற்படி சங்கம் ஆண்டுவிழா ஸ்ரீ R. T. தோதாத்திரி தலைமையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ S. V. கோதண்டராமன், தலைமை ஆசிரியர் ரிடையர் ஆகிறபடியால் பிரிவு உபசாரம் நடத்தப்பட்டது. எல்லா ஆசிரியர்களும், மாணவர்களும் புகைப்படம் பிடித்த பிறகு தேனீர் விருந்துக்குப் பின் பெண்களால் " நளன் " என்னும் நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

(11) ராம. இராமசாமி செட்டியார் உயர்தர ஆரம்பப்பள்ளி, நடராஜபுரம்.

8-8-54ல் இப்பள்ளியில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் முதற் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு உயர் திரு S முத்து வீரப்பா (தலைமை ஆசிரியர் கவுன்சிலர்) அவர்கள் தலைமை வகித்தார்கள்.

இப்பள்ளி மாணவன் A. பன்னீர்ச் செல்வம் இறைவணக்கம் பாடக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

அறிக்கை வாசித்தலுக்குப் பிறகு தலைவர் அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும் அதன் தோற்றம், வளர்ச்சி முதலியவைகளைப் பற்றியும் பேசினர். பிறகு பின்பற்றிப் பேசியீ உதவி ஆசிரியர்கள் திரு. ச. நாகராஜன், திரு அ. சபேசன் ஆகியோர் செஞ்சிலுவைச் சங்கத்தில் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளைப் பற்றியும் கூறினர்கள்.

தலைவர் திரு. S. முத்துவீரப்பா அவர்கள் தமது முடிவுரையில் மாணவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தில் ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றியும், அவ்வப்போது தாம் வேண்டியவைகளை செய்வதாகவும் கூறினர்.

பிறகு மாணவ, மாணவிகள் சுகாதாரப் பாட்டு, கோலாட்டம் முதலியவைகள் போட்டுக் காண்பித்தார்கள்.

கடைசியாககாட்டு வாழ்த்துப் பாடக் கூட்டம் இனிது முடிவடைந்தது.

நடராஜபுரம் இராம: இராமசாமி செட்டியார் உயர்தர ஆரம்பப்பள்ளியில் 15 8-1954ல் சுதந்திரதின விழா நடந்தேறியது. அன்று காலை நாட்டுக்கொடியுடனும் மகாத்மாவின் படத்துடனும், மாணவர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து ஊர்வலமாய் தேசீய கீதங்கள் பாடிக் கொண்டும் கோலாட்டம், கும்மி முதலியவைகள் அடித்துக்கொண்டும் பள்ளியை அடைந்தனர்.

பள்ளியில் உயர்திரு A. K. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் கொடியேற்றி வைக்க உள்ளூர் போஸ்டுமாஸ்டர் உயர்திரு. நாகநாதகனபாடிகள் அவர்கள் சீரிய தலைமையில் மாணவர் சங்கத்தின் ஆதரவில் கூட்டம் ஆரம்பமாயிற்று. உயர்திரு. தலைமை ஆசிரியர் எஸ். முத்துவீரப்பா அவர்கள் வந்திருந்தவர்களை வரவேற்றார். பள்ளி மாணவி கடவுள் வணக்கம் பாடியவுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைவர் தம்முடைய முன்னுரையில் நமது நாடு சுதந்திரம் அடைந்த வரலாற்றைப் பற்றி மிகவும் அழகாக எடுத்துரைத்தார். பின்பு தலைமை ஆசிரியர் திரு. முத்துவீரப்பா அவர்கள் சுதந்திர இந்தியாவில் மாணவர்களுடைய கடமையைப் பற்றியும், எல்லோரும் காந்தியின் பாதையிற் செல்ல இன்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்பு மாணவ மாணவிகள் சொற்பொழி வாற்றினார்கள். மாணவிகள் தேசிய கீதங்கள் பாடி கும்மி, கோலாட்டம் முதலியவைகள் போட்டுக் காண்பித்தார்கள்.

கடைசியாக மாணவர் சங்கக் காரிய தரிசியால் நன்றி கூறப்பட்டு நாட்டு வாழ்த்துடன் கூட்டம் முடிவுற்றது. பின்பு குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டவுடன் விழா இனிது முடிந்தது.

(12) குஷால்சந்த் உயர்தர ஆரம்பப்பாடசாலை, திண்டிவனம்.

15-8-1954ல் காலையில் ஊர்வலத்துக்குப் பின் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் விழா துவங்கியது. கடவுள் வணக்கத்திற்குப் பிறகு சாந்தா என்ற குழந்தையால் கொடி ஏற்றப்பட்டது. வித்துவான் ஜெயராமன், உதவி ஆசிரியர் தாஸன் முதலியவர்களால் சொற்பொழிவு ஆற்றப்பட்டது.

மாணவன் கோபாலகிருஷ்ணனால் அரியதோர் பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது.

சுதந்திர இந்தியாவில் மாணவர்களின் கடமையை விளக்கித் தலைவர் முடிவுரை நிகழ்த்தியபின் தேசிய கீதத்துடன் விழா இனிது முடிவுற்றது. சிறுவர்கட்கு இனிப்பு வழங்கப்பட்டது.

(13) சொக்கலிங்க வித்தியாசாலை, லெட்சுமிபுரம்.

15-8-54ல் சுதந்திர தின விழா கொண்டாடப்பெற்றது. வித்தியசாலைத் தலைமை ஆசிரியர் G. சுவாமிநாதய்யர் அவர்களால் தேசியக்கொடி ஏற்றிவைக்கப் பெற்று, கொடிவணக்கம் நடைபெற்றது. சுதந்திரம் கிடைத்தபின் நம்நாடு அடைந்துள்ள முன்னேற்றம்பற்றி விரிவாக எடுத்துரைக்கப் பெற்றது. பிறகு மாணவ, மாணவிகள் ஆசிரியர்களுடன் கோவிலுக்குச்சென்று ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வராள் தரிசனம் செய்து கொண்டு வித்தியாசாலை வந்தனர் கோவிலில் விசேஷ அர்ச்சனை நடைபெற்றது. பின் மாணவ மாணவிகளுக்கும், வந்திருந்தவர்களுக்கும் தின்பண்டங்கள் வழங்கியபின் தேசிய வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

(14) ஹரிஜன நலப்பள்ளி, கண்ணனூர், முசிரி வட்டம்.

15-8-54ல் இப்பள்ளியின் மாணவ மாணவிகள், மகாத்மா காந்தி, டாக்டர் ராஜேந்திர பிரசாத், பண்டிட் ஜவஹர்லால் நேரு ஆகிய தேசத் தலைவர்களின் படங்களை இரு சைக்கிள்களின்மேல் அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்து, தேசியக் கொடிகளால் அலங்கரித்து, தேசியப் பாடல்களுடன் ஊர்வலம் வந்தனர்.

பள்ளிக்குமுன் தேசியக்கொடி ஏற்றுவிக்கப்பட்டு பொதுக்கூட்டம் ஒன்று கூட்டுவிக்கப்பட்டது. கிராமப் பொது மக்களும் மாணவ மாணவிகளும் திரளாகக் கூடினர். உயர்திரு. நல்லப்ப ரெட்டியார் அவர்கள் தலைமை வகித்தார். கடவுள் வணக்கத்திற்குப் பின் கூட்டம் ஆரம்பமானது. பள்ளித் தலைமை ஆசிரியர் ஏ. பொன்னுசாமி முன்பிருந்த இந்தியாவின் நிலைமை, 1947 ஆகஸ்ட் 15க்குப் பின் சுதந்திர இந்தியாவின் சுபிட்சம், சர்வதேச அந்தஸ்து ஆகியவற்றை விளக்கி ஓர் சொற்பொழிவாற்றினார். தலைவர் முடிவுரைக்குப் பின் "ஜனகனமண" கீதத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. மாணவ மாணவிகளுக்கும் பொதுமக்களுக்கும் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

(15) ஹரிஜன நலப்பள்ளி, க. பேட்டை.

15-8-54ல் திம்மாச்சிப்புரம் விவசாய சங்கத் தலைவர் உயர்திரு. முத்துவீரன் தலைமையில் சுதந்திர தின விழாக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் திரு. சங்கர் ஆசிரியர் தலைவர்க்கு கதர்மாலை அணிவித்தனர். பின் A. M. கண்ணன் என்பவர் சுதந்திரம் என்பதுப்பற்றிப் பேசினார். பிறகு மாணவ, மாணவிகளுக்கும் பொது மக்களுக்கும் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

(16) ஹிந்து ஆரம்ப பாடசாலை, அரியூர்.

15-8-54ல் சுதந்திர தினத்தன்று காலை கொடியேற்றுதலும்; மாலைப் பொதுக் கூட்டமும் பள்ளியில் நடைபெற்றன. கூட்டத்திற்கு திரு S. சுப்பராய அய்யர் தலைமை வகித்தார். கொடி வணக்கத்திற்குப் பின் இறை வணக்கம் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் இது சுதந்திரம் கிடைத்து 8வது ஆண்டு என்றும், நாம் இன்னும் அரசாங்கத்துடன் நம்மால் இயன்றவரையில் ஒத்துழைக்க வேண்டும் என்றும், சிறுவர்கள் நன்றாகப் படித்து நல்லொழுக்கம், கீழ்ப்படியும் தன்மை, உதவிபுரியும் குணம் முதலியவைகளுடன் விளங்கி ஓர் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்றும் கூறினார். பின்னர்

உதவி ஆசிரியர் திரு. A. S. சந்தானம் அவர்களால் சுதந்திர தினச் செய்திகள் வாசிக்கப்பட்டன. பஞ்சாயத்து சபையினரால் கொடுக்கப்பட்ட தின்பண்டங்கள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. தலைமை ஆசிரியர் A. S. இராமநாதய்யரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு தேசிய வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

(17) தீர்த்தபதி உயர்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம்.

23-6-1954ல் அம்பாசமுத்தரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் 23-ஆண்டுகளாகத் தலைமையாசிரியராய்ப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஸ்ரீ E. H. பரமேஸ்வரன் அவர்கட்கு ஆசிரியர் சங்கமும், மாணவர் மன்றமும் பிரிவுபசாரம் நடத்தி வாழ்த்துப் பத்திரமும் அளித்தன.

(18) ராமநாதபுரம் ஜில்லா ஆசிரியர் கில்டு

7-8-54ல், கில்டின் 28வது மகாநாடு காரைக்குடி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

காலையில் மேற்படி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீ கே. ஆர். ஸ்ரீனிவாச அய்யரைக் குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியது.

மாலையில் காரியதரிசியால் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. 1954-55க்கு நிர்வாகஸ்தர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: ஸ்ரீ எம். ராஜா அய்யர். உபதலைவர்கள்: குமாரி டி. பால், ஸ்ரீ எஸ். எஸ். நாராயணசாமி அய்யர், ஸ்ரீ டி. ஸெபஸ்டியன். காரியதரி: ஸ்ரீ கே. எஸ். வெங்கடசுப்ரமணியன்.

தெ. இ. ஆ. சங்க நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள்:—

ஸ்ரீ. எம். ராஜா அய்யர்

ஸ்ரீ வி. அந்தோணிசாமி.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ எம். ஏ. பீர் முகம்மத் காரைக்குடி ஜனங்களின் சார்பாக எல்லாரையும் வரவேற்றார்.

தென்னிந்திய ஆசிரிய சங்கத் தலைவர் ஸ்ரீ எஸ். நடராஜன் வரவேற்புக் கமிட்டித் தலைவரின் பிரசங்கத்திற்கு சிலாகித்துவிட்டு ஆசிரியர் கில்டின் ஒத்துழைப்போடு கூடிய செயல்களைப் பாராட்டினார். ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை ஊக்கத்துடனும் உண்மையுடனும் செய்யவேண்டும் என்றும் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து கடமைகளைச் செய்தால் சுதந்திர இந்தியா முன்னேற்றமடையும் என்றும் கூறினார்.

அளகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சி காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீ துரைக்கண்ணு முதலியார் தலைமை வகித்துப் பேசுகையில் தன்னலமின்றி தென்னிந்திய ஆசிரியர் சங்கத்துக்கு உழைத்துவரும் ஸ்ரீ நடராஜ அய்யரைப் பாராட்டினார். பிறகு ஆசிரியர்களைக் குறித்து தாங்கள் தங்களுக்குள் வித்தியாசம் பாராட்டக்கூடாது என்றும், எல்லா ஆசிரியர்களும் ஒற்றுமையுடனும் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்தும் நடந்து கொண்டால் ஜனங்களுடைய மதிப்பு தானே வரும் என்றும் கூறினார்.

அண்ணாமலை மெடல் எஸ். எஸ். எல். ஸி. யில் அதிக மார்க்குகள் பெற்ற ஸ்ரீவில்லிப்புத்தூர் ஹிந்து உயர்நிலைப்பள்ளி மாணவன் சிரஞ்சீவி எஸ். ஆர். கோவிந்தராஜனுக்கு அளிக்கப்பட்டது.

ஸ்ரீ ஸி. ரெங்கநாத அய்யங்கார் ஆசிரியர் சாஸனத்தைப்பற்றி விளக்கிப் பேசினார். மற்றும் பலர் பேசினார்கள். பின்பு எல்லாரும் சேர்ந்து குறிப்பிட்ட பிரதிக்ஞையைச் செய்து கொண்டார்கள். வந்தனோபசாரத்துடன் மகாநாடு முடிவடைந்தது.

# பத்திராதிபர் குறிப்பு

தமிழ்நாடு கமிட்டியால் நியமிக்கப்பட்ட கல்வி உபகமிட்டியார் சமீபத்தில் மதுரையில் கூடியபோது விடுத்துள்ள யோசனைகளை ஆசிரியர் சார்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

இந்தக் கமிட்டியில் ஸ்ரீ E. H. பரமேஸ்வரன், M. L. C. ஸ்ரீ V. நடராஜன் (முன்னாள் டிவிஷனல் இனிஸ்பெக்டர்), ஸ்ரீ V. பூவராகமூர்த்தி (ஆசிரியர் சங்க காப்புநிதித்தலைவர்) ஸ்ரீ V. ராஜகோபாலய்யர் (ரிடயர்டு ஹெட்மாஸ்டர்) முதலியவர்கள் அங்கத்தினர்கள். இவர்கள் எல்லாரும் நமது ஆசிரிய சங்கத்தில் பல ஆண்டுகளாக உழைத்து வருபவர்கள். இவர்களைத் தவிர ஸ்ரீ சாம்பசிவ ரெட்டியார், M. L. A., ஸ்ரீ ராமஸ்வாமி நாயுடு, M. L. A., ஸ்ரீ M. S. செல்வராஜ் இவர்களும் அங்கத்தினர்கள்.. இத்தகைய கமிட்டியார் பல ஆசிரியர்களையும் கலந்துகொண்டு நன்கு ஆலோசித்து முடிவுசெய்து அளிக்கும் தீர்மானங்களை சென்னை சர்க்கார் ஏற்றுக்கொண்டு அவைகளில் பெரும்பான்மையான யோசனைகளை அமல் நடவடிக்கையில் கொண்டுவருவார்களென நம்புகிறோம்.

ஆசிரியர்களது நிலையை உயர்த்தி அவர்களும் சமூகத்தில் சிறந்த சேவை செய்பவர்கள் ஆதலின் அவர்கள் சுகமாகவும் சந்தோஷமாகவும் உழைக்கும்படி வசதிகள் செய்துதருவது எந்த சர்க்காருடையவும் முதல் கடமையாகும். இதை உணர்ந்தே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுக் காரியதரிசி எல்லாப் பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அறிக்கை அனுப்பியுள்ளார். அதை அனுசரித்துஇந்தக் கமிட்டியை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நியமித்துள்ளது. ஆட்சி நிர்வாகப் பொறுப்பை மேற்கொண்டு நடத்திவரும் காங்கிரஸ் கட்சி சர்க்கார், தங்கள் கட்சிக் கமிட்டியார் தரும் யோசனைகளை அனுவசியமாகப் புறக்கணிக்க மாட்டார்கள் என நம்பலாம்.

இந்தக் கமிட்டியார் அளித்துள்ள பல யோசனைகளையும் நாம் வரவேற்கிறோம். அவைகள் யாவும் நமது ஆசிரியர் மகாநாடுகளில் வற்புறுத்தி வந்த விஷயங்களேயாம். வாழ்க்கைக்கு வசதியான அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்கவேண்டும். புதுப் பள்ளிகளை நடத்த அனுமதிக்கும்போது முதலாளித்வம் கொண்ட தனி நபர்களுக்கன்றி ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் ஆசிரியர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அதிகச் சலுகை காட்டவேண்டும். ஆசிரிய சர்விஸ் ஒப்பந்த ஏற்பாடு சீராக மாற்றப்படவேண்டும். சமூக நலத்திட்டங்களிலும் கிராமத் திருப்பணி அலுவல்களிலும் ஆசிரியர்களுக்கு அதிகப் பங்கு கொடுத்து அவர்களது இதர வருவாய் பெருக உதவவேண்டும். சமூகத்திலும் சர்க்காரிலும் உள்ள கௌரவ பதவிகளில் ஆசிரியர்களை அதிகமாக நியமித்து அவர்களது அந்தஸ்து உயரும்படி சந்தர்ப்பம் தரவேண்டும். மாற்றிக்கொள்ளும் ஆசிரியர்களது சம்பளங்கள் குறையாமல் இருக்கவேண்டும். பிராவிடண்டு பண்டு, இன்ஷியூரன்ஸ் வசதிகள் கட்டாயமாக்கப்பட வேண்டும். முக்கியமாக எல்லா ஆசிரியர்களும் கட்டாய இன்ஷியூரன்ஸ் திட்டத்தில் சேர வேண்டும். பிராவிடெண்டு நிதிக்கு போஸ்டு ஆபீசில் தரும் வட்டி விகிதம் உயர்த்தப்பட வேண்டும். கிராட்டியுடி, பென்ஷன் முதலிய வசதிகள் ரிடயர் ஆகும் ஆசிரியர்களுக்குக் கிடைக்குமாறு திட்டம் வகுக்க வேண்டும்.

இவைகளெல்லாம் நமது ஆசிரிய சங்கங்கள் கேட்டுவரும் கோரிக்கைகள் தாம். ஆனால் முக்கியமான இன்னொரு யோசனையைப்பற்றி நாம் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். அது, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் நில மான்யம் அளிக்கப்படவேண்டும் என்பதாகும். கமிட்டியின் இச் சிபார்சைப்பற்றிய விளக்கம் அறிய நாம் ஆவலாக இருக்கின்றோம். இந்நிலங்களைச் சாகுபடி செய்வதினாலும், மற்றய

கிராமத் தொழில்களில் பங்கெடுத்துக் கொண்டும் ஆசிரியர்கள் தங்கள் மாதச் சம்பளத்தைச் சம்பாதித்துக்கொள்வது என்றால், சுதேசமித்திரன் பத்திரிகை எழுதியுள்ளதுபோல், பள்ளி மாணவர்களின் கல்விப் பயிற்சி தடைபெறக்கூடும். ஆசிரியர் கவனம் தனது முக்கியத் தொழிலில் இல்லாமல், பயிர்த் தொழிலில் சென்றுவிடக்கூடும். ஆனால் இம்மாதிரியான மான்யங்களை பள்ளிக்கு அளித்து, கிராம மக்கள் அதைப் போஷித்து அதன் வருவாயைக் கல்வி நிதியில் சேர்ப்பதானால், அரசாங்கத்தார் வரிப் பணத்திலிருந்து, கல்விக்கு ஒதுக்கும் பணத்தின் அளவை அதிகரிக்கக்கூடும். ஆசிரியர்களுக்கும் போதுமான சம்பளம் கொடுக்க முடியும்; கல்வியையும் நாடெங்கும் பரப்பலாம். தவிரவும், இத்தகைய மான்ய நிலம், பள்ளிக்கு அருகாமையிலிருக்குமானால், பயிர்த் தொழிலை மையமாகக்கொண்ட ஆதாரக் கல்வித் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவது எளிதாகும்.

பூதான இயக்கத்தின் பலனாக கிடைத்துள்ள நிலத்தில், எங்கெங்கு சாத்தியப்படுமோ அங்கெல்லாம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் 5 முதல் 10 ஏகரா நிலம் ஒதுக்கி மான்யமாக அளிக்கலாம். இதர இடங்களில் கிராம சமூகத்தார் ஒற்றுமைப்பட்டு நிலத்தை ஒதுக்கி மான்யம் தரவேண்டும். இந்த யோசனையைச் சீர்ப்படுத்தி நடைமுறையில் சுலபமாக அநுசரிக்கும் அளவில் கமிட்டியார் யோசனை இருக்குமென நம்புகிறோம். இக்கமிட்டியார் சிபார்சுகளை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் ஒப்புக்கொண்டு, காங்கிரஸ் சர்க்கார் திட்டமிடவேண்டுமென வற்புறுத்தினால், கட்டாய இலவசக் கல்வி பரவுவதற்கு சாதகமாயிருக்கும். உத்தரப் பிரதேசத்தில், இம் மாதிரியான திட்டத்தை அரசாங்கத்தார் அமுலுக்குக் கொண்டுவந்துள்ளார் என்ற பத்திரிகைச் செய்தி இது சாத்யம் என்பதைக் குறிக்கின்றது.

---


## சந்தாதார்களுக்கு அறிக்கை

1954 ஜூலை, ஆகஸ்டு மாதங்களோடு முடிவடையும் சந்தா நம்பர்கள் :—


சென்னை—M. 6, 10, 24; 2.
வட ஆற்காடு—NA. 21, 39; 7, 22—A, 29, 48.
தென் ஆற்காடு—SA. 3, 5, 11, 21, 61, 63; 42.
செங்கற்பட்டு—Ch. 7.
சித்தூர்—Ct. 5.
கோயம்புத்தூர்—Co. 25; 16, 35.
மதுரை—Md. 7, 21, 43; 40.
ராமநாதபுரம்—Rd. 6, 14, 15, 26, 66, 67; 32.
சேலம்—S. 14, 25, 27, 56; 28, 29, 31, 50.
தஞ்சாவூர்—Tan. 7, 26, 94; 13, 27, 60, 72.
திருநெல்வேலி—Tin. 11, 73; 82.
திருச்சிராப்பள்ளி—Tri. 24, 26, 35; 16, 37.
திருவாங்கூர்—Tra. 2.

குறிப்பு :—ஷை சந்தாதார்களும் சந்தா பாக்கியுள்ள மற்ற சந்தாதார்களும் தங்கள் சந்தா தொகையை செப்டம்பர் மாத முடிவிற்குள் கட்டிவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அடுத்த இதழை வி. பி. யில் அனுப்ப நேரிடுமாகையால் சந்தாவை முன்கூட்டியே செலுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் சந்தா அனுப்ப அசௌகரியமுள்ளவர்கள் செலுத்தக்கூடிய தவணையை முன்பாகவே தெரிவிக்கலாம்.

—பத்திராதிபர்



மேஜர் ஜெனரல் கடோச் அவர்கள் வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு வந்தபோது
எடுத்த படம். மேஜர் ஜெனரல் கடோச் அவர்களும், கர்னல் சேதுராம் அவர்களும்,
பாடசாலைச் செயலாளர் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும்
படத்தில் காணப்படுகிறார்கள்.



வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் சார்பில் வேதாசலம் உணவுக் கூடத்தின்
கால்கோள் விழா, ஸர். ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் ஆற்றியபோது
எடுத்த படம்.

Regd. No. M. 3473

THE

# S. I. T. U. PROTECTION FUND LTD.

**520, HIGH ROAD, TRIPLICANE, MADRAS-5**

*(Registered under the Insurance Act as a Mutual Insurance Co.)*

## Total Assets Exceed 12,00,000

**No. of Policy-holders over 4500**

Please remember that this is your own Insurance Society and that its members form, as it were, a co-operative group to enable one another mutually to make provision for their old age and their families.

There are five tables for 10, 15, 20, 25 and 30 years.

Teachers may take ONE to SIX units according to their ages.

One unit guarantees a benefit of Rs. 250/-, which goes on increasing by Rupees Five after every year of membership.

You will not find a cheaper Insurance Cover.

By taking a Policy in the Protection Fund, you strengthen the teachers' organisation and at the same time make provision for your old age and family.

For particulars write to:

THE SECRETARY.

Printed by Sri T. K. Venkatesan at The Jupiter Press, Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited & Published by Sri S. Natarajan for "The South India Teachers' Union" 520, High Road, Triplicane, Madras.